Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

விரைவாகவும், துல்லியமாகவும்
உங்கள் இல்லங்களிலிருந்து
உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்
INTERNET
மூலம் தொடர்புகொள்ள
உள்நாட்டு வெளிநாடுகளுக்கான சகல
விதமான துரித தபால்/பொதிகள் சேவை
Sri Murugan
Tele Communication & Agency Post Office
303, K.K.S. ROAD, JAFFNA T.P - 021 2222670
FAX - 222 3214 email - del - smskr@eureka.lk
(சி-2015)

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 தை 02 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 துல்ஹஃதா 23 (16.01.2004) வெள்ளிக்கிழமை இதழ்:107

# அரசியல் நெருக்கடி தீர்க்கப்படும் வரை

# போர்நிறுத்தத்தைக் கடைப்பிடிப்போம்!

## சொல்ஹெய்மிடம் பாலசிங்கம் தெரிவிப்பு





(லண்டன்)

**கொழும்பில் தற்போது ஏற்பட்டிருக்கும் அரசியல் நெருக்கடி நிலையிலும் விடுதலைப் புலிகள் போர் நிறுத்த உடன்படிக்கையையும், அதனோடு இணைந்த சமாதான முயற்சியையும் தொடர்ந்து கடைப்பிடித்து வருகிறார்கள்.**

**இவ்வாறு நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்மிடம் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.**

நேற்றுமுன்தினம் லண்டனிலுள்ள பாலசிங்கத்தின் இல்லத்தில் நடந்த இந்தச் சந்திப்பில் நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சொல்ஹெய்ம், நோர்வே வெளிவிவகார அமைச்சின் நிறைவேற்று அதிகாரி எரிக் இறஸ்கி, மற்றும் நோர்வே அதிகாரி ஒருவர், ஆகியோர் கலந்து கொண்டனர். மூன்று மணிநேரம் நடந்த சந்திப்பில், தற்போது கொழுமபில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிநிலை மற்றும் நின்றுபோயுள்ள சமாதானப் பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிப்பது தொடர்பாகவும் ஆராயப்பட்டது. இந்தச் சநதிப்பின்போது, அன்ரன் பாலசிங்கம் நோர்வே பிரதிநிதிகளுக்கு தெரிவித்ததாவது, கொழும்பில் நிலையான அதிகாரத்துடன் கூடிய அரசொன்று ஏற்பட்டவுடன் விடுதலைப் புலிகள சமாதானப் பேச்சுவார்த்தையில் பங்கெடுத்துக்கொள்வர். இந்த அரசாங்கம் சமாதானத்தை நாட்டில் நிலைபெறச் செய்வதற்கு சிங்கள மக்களிடமிருந்து பெரும்பான்மையைப் பெற்றிருக்கவேண்டும். அத்துடன் முடிவுகளை அமுல

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கேணல் கிட்டுவின் நினைவு நாள் இன்று

(யாழ்ப்பாணம்)

மூத்த தளபதி கேணல் கிட்டு உட்பட 10 மாவீரர்களின் 11 ஆம் ஆண்டு நினைவு நாள் இன்று உணர்வுபூர்வமாகக் கடைப்பிடிக்கப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் பிரதான நிகழ்வு வல் வெட்டித்துறையிலுள்ள தீருவில் சதுக்கத்தில் இன்று மாலை இடம்பெறும்.

இதேவேளை, கிட்டுவின் நினைவுநாளையொட்டி புலிகளின் குரல் சிறப்பு ஒலிபரப்பு ஒன்றினை நடத்தவுள்ளது. இந்த ஒலிபரப்பு இன்று மாலை 5 மணிமுதல் இரவு 10 மணி வரை நடைபெறவுள்ளது.

இந்த ஒலிபரப்பில் மூத்ததளபதி பொட்டு அம்மான், கடற்புலிகளின் .சிறப்புத்தளபதி கேணல் சூசை, மணலாறு கட்டளைப்பணியக

(10 ஆம் பக்கம் பார்க்க)

## முரண்பாடுகளை தீர்க்க வற்புறுத்து

(கொழும்பு)

ஜனாதிபதியும், பிரதமரும் தமக்கிடையேயான வேறுபாடுகளை கலந்துரையாடல்கள் மூலம் தீர்த்துக்கொள்ள வேண்டுமென- வர்த்தக சமூகம் கோரியுள்ளது.

இது தொடர்பாக வர்த்தக சம்மேளனத் தலைவர் மகேந்திர அமர சூரிய தெரிவிக்கையில் - நிறைவேற்று அதிகாரம் மற்றும் சட்டத்துறை தொடர்பான தமது கருத்துக்களை வெளிப்படுத்த உள்ளதாகத் தெரிவித்தார்.

அத்துடன் இந்த மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர், ஜனாதிபதியும் பிரதமரும், கலந்துரை

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கண்ணிவெடிகளை அகற்றும் பணிக்கு

# 6 மோப்ப நாய்களை அமெரிக்கா வழங்கும்

(கொழும்பு)



பயிற்சியில் அமெரிக்க நாய்.

இலங்கையில் கண்ணிவெடிகளை அகற்றும் பணிக்காக, ஆறு மோப்பநாய்களை அமெரிக்கா வழ்ங்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

இது தொடர்பாக அமெரிக்கத் தூதரகம் நேற்று அறிக்கையொன்றை விடுத்தது. அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அரசியல் மற்றும் இராணுவ விவகார உதவிச் செயலாளர் லின்கோன் புளூம்பீல்ட் வொஷிங்ரனிலுள்ள இராஜாங்கத் திணைக்களத்தில் நடந்த நிகழ்ச்சியொன்றில் பேசும்போதே அவர் இந்த அறிவிப்பை விடுத்தார்.

ஒரு லட்சத்து 20 ஆயிரம் டொலர் பெறுமதியான ஆறு மோப்ப நாய்களை அமெரிக்கா கண்ணிவெடி அகற்றும் பணிக்காக இலங்கைக்கு வழங்கும். கண்ணிவெடிகள் காணப்படும் பகுதிகளை துரிதமாகக் கண்டறிந்து அவற்றை அகற்றுவதற்கு உதவியாகவே இந்த உதவி வழங்கப்படவுள்ளது.

மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் திட்டத்துக்கு அமெரிக்கா தொடர்ந்தும் ஆதரவளிக்கும்.

1993 ஆம் ஆண்டு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் திட்டத்தை ஆரம்பித்தபின்னர் - உலகம் முழுவதும் இந்தப் பணிக்காக 700 மில்லியன் டொலர் செலவிடப்பட்டிருப்பதாகவும் புளூம்பீல்ட் மேலும் தெரிவித்தார்.

# கற்கோவளம் கடற்பரப்பில் மூழ்கி 2 இளைஞர்கள் பரிதாப மரணம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை - கற்கோவளம் மூர்க்கம் கடற்பரப்பில் குளிக்கச்சென்ற இளைஞர்களில் இருவர் நீரில்மூழ்கி மரணமாகினர். இந்தச் சம்பவம் நேற்றுமாலை இரண்டு மணியளவில் இடம்பெற்றது.

கரவெட்டி மாலுசந்திப்பகுதியைச் சேர்ந்த படப்பிடிப்பாளர்களான பேரானந்தம் உமாசுதன் (வயது 29) மற்றும் அதேயிடத்தைச் சேர்ந்த ஸ்ரீபாலகணேசமூர்த்தி சுதாகர் (வயது 23) ஆகிய இரு இளைஞர்களுமே பரிதாபகரமாக உயிரிழந்தவர்களாவர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

உயிரிழந்த இளைஞர்கள் இருவரும், சக நண்பர்களுடன் கடலில் குளித்துக்கொண்டிருந்த வேளையில் சுழியொன்றினுள் அகப்பட்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# யூனியன் கல்லூரிக்கு சென்ற மாணவர். படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டனர்!

தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்வுக்கு சென்ற மாணவர்களை படையினர் உட்செல்ல விடாது தடுத்தனர். இதனால் நிகழ்வில் கலந்துகொள்ளாது பல மாணவர்கள் வீட்டுக்குத் திரும்பினர்.

தைப்பொங்கல் தினமான நேற்று பாடசாலையில் பொங்கல் பூசை செய்வதற்காக மாணவர்களை வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. இதனையடுத்தே, மாணவர்கள் பாடசாலைக்குச் சென்றிருந்தனர்.

பாடசாலை நுழைவாயிலிருந்த படையினர் மாணவர்களை உட்செல்வதற்கு அனுமதிக்கவில்லை. அதிபர், அல்லது ஆசிரியர்கள் வநத பின்னரே, அனுமதிக்கப்படும் என படையினர் தெரிவித்திருந்தனர்.

பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் வருவார்கள் என மாணவர்கள் காத்திருந்தனர். எவரும் வராததை அடுத்து மாணவர்கள் ஏமாற்றத்துடன் வீடுதிரும்பினர். மூன்றுமணிநேரத்தின் பின்னர், அதிபர் பாடசாலைக்கு வந்திருந்த போது, அங்கிருந்த மாணவர்கள் சிலரும், அதிபரும், பொங்கல் பூசையில் ஈடுபட்டனர். பின்னர் ஆசிரியர்களும் பொங்கலில் கலந்து கொண்டனர்.

## சமாதான முயற்சியை ஆரம்பிக்க சந்திரிகா அழைப்பு!

(கொழும்பு)

நியாயமானதும், உறுதியானதுமான அரசியல் பணிகள் புரிவதற்கு அரசியல் தலைவர்கள் முன்வரவேண்டும் என்று ஜனாதிபதி சந்திரிகா அழைப்பு விடுத்தார்.

நேற்று தைப்பொங்கல் தினத்தையொட்டி நாட்டு மக்களுக்கு தமிழில் உரையாற்றிய போதே, ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்-

சமாதான முயற்சியை தாமதமின்றி மீண்டும் ஆரம்பிப்பதற்கு அனைவரும் முன்வர வேண்டும். இதற்கென சிறப்பான நடவடிக்கைகள் பலவற்றை எடுத்துள்ளேன். சமாதானத்தினை தொடரவும், பேச்சு வார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்கவும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு வசதிகளை வழங்குமாறும், அனைத்து அதிகாரங்களையும் வழங்கியுள்ளேன். சகலருக்குமான நீதி வழங்கப்படவேண்டும்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# புதுடெல்கியில் பாதுகாப்பு அதிகாரிகளுடன் இலங்கைக்குழு பேச்சுக்களை ஆரம்பித்தது

## இன்றும் தொடர்ந்து நடைபெறும்

(புதுடெல்கி)

மூன்று நாள் விஜயமாக இந்தியாவுக்குச் சென்றுள்ள பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் தலைமையிலான மூன்று உறுப்பினர் உயர்மட்டப் பாதுகாப்புக்குழு இந்திய அதிகாரிகளுடன் நேற்று முக்கியமான பேச்சுக்களை ஆரம்பித்தது.

இந்தப் பேச்சுக்கள் குறித்து இந்தியப் பாதுகாப்பு அமைச்சு நேற்றுமாலை வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது-

நேற்றுமுன்தினம், புதுடெல்கியை வந்தடைந்த இலங்கையின் உயர்மட்டப் பாதுகாப்பு அதிகாரிகள் குழு இந்திய அதிகாரிகளுடன் நேற்றுப் பேச்சுக்களை நடத்தியது.

இந்தச் சந்திப்பின்போது, இராணுவப் பயிற்சித் திட்டங்களில் இருதரப்பு ஒத்துழைப்புக்கள் மற்றும் பாதுகாப்பு விடயங்களுடன் தொடர்புடைய விவகாரங்கள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.

அத்துடன், இந்தச் சந்திப்பில் ஈடுபட்ட இருதரப்பினரும் பிராந்தியப் பாதுகாப்புத் திட்டம் மற்றும் சர்வதேச தீவிரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகள் குறித்தும் கலந்துரையாடினர்.

இந்தப் பேச்சுக்கள் இன்றும் தொடர்ந்து இடம்பெறும்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் தலைமையிலான இலங்கை குழுவில் இராணுவத்தளபதியும், கூட்டுப்படைகளின் தளபதியுமான லெப்.ஜெனரல் லயனல் பலகல்ல, ஜனாதிபதியின் சட்ட ஆலோசகர் நிகெல் ஹற்ச், இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் மங்கள முனசிங்க ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்திய அதிகாரிகள் தரப்பில் பாதுகாப்பு

(10 ஆம் பக்கம் பார்க்க)

# திராவிட முன்னேற்றக் கழகத்தின் கூட்டணி உறுதி மிக்கதென்கிறார் துக்ளக் ஆசிரியர் சோ



(சென்னை)

துக்ளக் இதழின் ஆண்டுவிழா சென்னையில் நடந்தது. இதில் ரஜனிகாந் தனது மனைவி லதா, மைத்துனர் ராகவேந்தர் ஆகியோருடன் கலந்துகொண்டார்.

பா.ஜ.க பொதுச்செயலாளர் இல. கணேசன், மத்திய அமைச்சர் திருநாவுக்கரசு உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பங்கேற்ற இந்த விழாவில் துக்ளக் ஆசிரியர் சோ - இன்றைய அரசியல் குறித்துப் பேசினார்.

இப்போது தி.மு.க தலைமையில் ஏற்பட்டுள்ள கூட்டணி மிகவும் உறுதியானதென்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஜெயலலிதா செய்த தவறு - சோனியாவை வெளிநாட்டவர் என்று ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பு கூறியதுதான்.

கடைசிவரை தி.மு.க கூட்டணியை நம்பியே காங்கிரஸ் இருப்பது போல் செய்திருக்க வேண்டும். ஆனால், நாம் சோனியா வைத் திட்டினால் காங்கிரஸ் தனியே நிற்கும். தி.மு.க தொடர்ந்து பா.ஜ.க கூட்டணியிலேயே இருக்கும். நாம் மூன்றாவது அணி அமைத்து வெல்லலாம் என்று ஜெயலலிதா நினைத்து விட்டார்.

காவிரிப் பிரச்சினையில் ஜெயலலிதா அரசின் அணுகுமுறை தவறு. தலைமைச் செயலக மாற்றம் தவறு. ராணி மேரி கல்லூரி உட்பட எந்தக் கட்டடத்தைப் பார்த்தாலும், இடிக்க நினைப்பது தவறு. எதிர்க் கட்சிகளை துச்சமாக நடத்திய முறை தவறு, சபாநாயகரை இவர் சொல்லும்படியெல்லாம் நடக்க வைத்தது தவறு. இதைச் சொல்வதால் என்மீது உரிமைப் பிரச்சினைகூட வரலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# புதுடெல்கியில் கடும் பனிமூட்டம் காரணமாக விமானங்கள் சென்னையில் தரையிறக்கம்!

(புதுடெல்கி)

லண்டனில் இருந்தும், பிராங் பேட்டில் இருந்தும் டெல்லிக்குச் சென்றுகொண்டிருந்த விமானங்கள் அங்கு கடும் பனிமூட்டம் நிலவியதன் காரணமாக நேற்று அதிகாலை சென்னையிலேயே தரையிறக்கப் பட்டன.

வட இந்தியா முழுவதும் கடும் குளிரும், பனியும் வாட்டிவருகிறது. கடும் குளிருக்கு இதுவரை நூற்றுக் கணக்கானவர்கள் பலியாகியுள்ளனர். சில மீற்றர் தூரத்திலிருக்கும் வாகனங்கள்கூட தெரியாத அளவுக்கு காலை 10 மணிவரை பனிமூட்டம் நிலவுகின்றது.

இதனால், விமான ரயில் பஸ் போக்குவரத்துக்கள் மிகக் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் லண்டனில் இருந்து டெல்லிக்கு வந்த லூப் தான்சா விமானமும் பிராங்பேட்டில் இருந்து டெல்கிக்கு வந்துகொண்டிருந்த பிரிட்டிஷ் எயர்வேய்ஸ் விமானமும் இந்திய வான்வெளியில் இருந்தபோது டெல்கி பனிமூட்டம் குறித்து இந்திராகாந்தி சர்வதேச விமான நிலையத்தால் தகவல் தரப் பட்டது.

அங்கு தரையிறங்குவதற்கு சாத்தியமில்லை என்பதால் சென்னையில் தரையிறங்குமாறு அறிவுறுத்தப்பட்டது. இதையடுத்து, அந்த இரு விமானங்களும் நேற்று அதிகாலை 3 மணிக்கு சென்னை மீனம்பாக்கத்தில் தரையிறக்கப்பட்டன.

அதிலிருந்த 722 பயணிகள் சென்னையில் பல்வேறு ஹொட்டல்களில் தங்கவைக்கப்பட்டனர். டெல்லியில் பனிமூட்டம் குறைந்தபின், இந்த விமானங்கள் மீண்டும் அங்கு திரும்பிச்சென்றன.

# சிறப்பாக நடைபெற்ற தைப்பொங்கல் விழா

தமிழர் பெருநாள் தைப்பொங்கல் விழா - உழவர்களை நினைவுகூரும் இன்பவிழா நேற்று கிளிநொச்சி வேளாண தொழில்நுட்ப முன்றலில் இடம்பெற்றது. இந்த நிகழ்வினை வேளாண தொழில்நுட்ப நிறுவனம், சோழன் நிறுவனம், நிதித்துறை நிறுவனங்கள், தமிழீழ வானொலி ஆகியன இணைந்து ஒழுங்கு செய்திருந்தன.

தைப்பொங்கல் நிகழ்வில் பொதுச்சுடரை கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் இராசநாயகம், துணுக்காய் ப.நோ.கூ.சங்க பொதுமுகாமையாளர் ஜெகநாதன், வலயக் கல்விப் பணிப்பாளர் அரியரத்தினம், கிளிநொச்சி மாவட்ட விவசாய சம்மேளனத் தலைவர் மனோகரன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தேசியக் கொடியினை மூத்த தளபதிகளில் ஒருவரான அறவாணன் ஏற்றிவைத்தார். அதனைத் தொடர்ந்து பொங்கல் சிறப்புரை நிகழ்வுகள் இடம்பெற்றன. இந்த நிகழ்வில் பிரதேச உதவி அரசாங்க அதிபர்கள், திணைக்கள அதிகாரிகள், கூட்டுறவுச்சங்கப் பணியாளர்கள், நிதித்துறையின் நிறுவன பணியாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# கேணல் கிட்டு ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்தை இளவாலை யங் ஹென்றீசியன் கைப்பற்றியது!

தமிழீழத்தின் எட்டு மாவட்டங்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்கள் பங்குகொண்ட கேணல் கிட்டு ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்கான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில், யாழ். மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி பங்குபற்றிய இளவாலை யங் ஹென்றீசியன் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றது.

நேற்றுமுன்தினம் மாலை 4 மணிக்கு கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமான இறுதிப் போட்டியில் - முல்லைத்தீவு மாவட்ட அணியான விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்தாடி 1-0 என்ற கோல் கணக்கில் யங் ஹென்றீசியன் வெற்றிபெற்றது. தமிழீழ விளையாட்டுத்துறையைச் சேர்ந்த இன்பன் தலைமையில் நடைபெற்ற பரிசளிப்பு நிகழ்வில் - வெற்றிக் கேடயத்தை குட்டிசிறி மோட்டார் படையணித் தளபதி கேணல் பானு வழங்கிக் கௌரவித்தார். (71)

## பொங்கு தமிழின் 3 ஆம் ஆண்டு நிறைவு

யாழ். பல்கலைக்கழக மாணவ சமூகத்தினால் முன்னெடுக்கப்பட்ட பொங்கு தமிழின் மூன்றாம் ஆண்டு நிறைவு நிகழ்வு நாளை இடம்பெறவுள்ளது.

நாளை மாலை மூன்று மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும் நிகழ்வில். - யாழ். பலகலைக்கழக சமூகத்தின் பிரதிநிதிகள், விடுதலைப் புலிகளின் முக்கிய பிரதிநிதிகளும் கலந்துகொண்டு சிறப்புரையாற்றவுள்ளதாக, பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.


## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1972 இல் பிறந்த விசாக நட்சத்திர லண்டன் பிரசாவுரிமையுள்ள மணமகனுக்கு - 5 அடி உயரமுள்ள அழகிய மணமகள் தேவை.

படம் - சாதகக் குறிப்புடன் விண்ணப்பிக்கவும்.

ப.கிருஷ்ணமூர்த்தி
(தேவி அச்சக ஒழுங்கை)
114/19, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

போன் - 2789 (591)


## மாநகரசபை யாழ்ப்பாணம்

### காணி புனரமைப்புக்கு செம்மண் வழங்கக்கூடியவர்களை கோருதல்

2004 ஆம் ஆண்டுக்கு மாநகரசபையின் சுப்பிரமணியம் பூங்கா புனரமைப்பு வேலைக்குத் தேவையான செம்மண் 225 கியூப் விரைவாகக் கொண்டுவந்து பறித்து அளவு கொடுக்கக்கூடிய வழங்குனர்களிடமிருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றது. கூறுவிலைகள் தங்களாலேயே கீழ்க்காணும் விபரம்கொண்ட படிவ அமைப்பில் தயாரித்து 22-01-2004ம் திகதியன்று முற்பகல் 11.00 மணிக்கு முன்னர் கூறுவிலைகள் யாவும் 'ஆணையாளர் மாநகரசபை யாழ்ப்பாணம்' எனும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபாலிலோ கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும். பின்னர் பி.ப. 2.30 மணிக்கு கூறுவிலைகள் திறக்கப்படும். அவ்வேளை வழங்குனர் சமுகம் கொடுத்து பொருத்தமான கூறுவிலைகாரர் சபையுடன் நிபந்தனையுடன் கூடிய ஒப்பந்தம் கைச்சாத்து இடப்படல் வேண்டும் என்பதை அறியத்தருகின்றேன்.

| வழங்கக்கூடிய அளவு | ஒரு கியூப் விலை | வழங்கக்கூடிய காலம் | தேவை |
|---|---|---|---|
| | | 29.01.04 க்குள் | 225 கியூப |
| ........ | ........ | ........ | ........ |

இ.இராமலிங்கம்
மாநகர ஆணையாளர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

திகதி: 14.01.2004 (சி-2145)


## சிறு விளம்பரம்

### கணக்குப் பதிவாளர் தேவை

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் இயங்கும் ரதி வோச் வேக்ஸிற்கு கணக்குப் பதிவாளர் ஒருவர் தேவை. ஆங்கில அறிவுடன் கூடிய 35 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள் விரும்பத்தக்கது. தகுதியுடையவர்கள் மேற்படி முகவரிக்கு நேரில் சமுகம் தரவும். (சி-2148)






ராஜா யாழ்ப்பாணம்.

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே வெளியீடு

பிரசாந், தியாகராஜன், பானுப்பிரியா நடித்த

ஜெய்

காட்சிநேரம் :
10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

ஆசனங்களை முற்பதிவு செய்துகொள்ளலாம். (சி-2005)

நிறஞ்சனாஸ் சங்கானை

சரண், மீரா வாசுதேவன் நடித்த

உன்னைச் சரணடைந்தேன்

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)

TOMP RAIDER II (சி-2004)

## பாடசாலை அதிபர்களே! மாணவ மணிகளே!

எமது ஸ்தாபனத்தின் 45 ஆம் வருட பூர்த்தியை முன்னிட்டு 5% - 50% விலைக்கழிவு 31.01.04 வரை பாடசாலை, பல்கலைக்கழக பாடப் புத்தகங்களுக்கு வழங்கப்படும். இப்பொழுது பாடசாலை தவிர்ந்த ஏனையவர்களுக்கும் டிவான், டின்ஸ் கணக்குக் குற்றிகள் வழங்குகின்றோம். இன்றே விஜயம் செய்யுங்கள். பாடசாலை, பல்கலைக்கழக மாணவர்களுக்கான பாடப்புத்தகங்கள், உபகரணங்கள், பேப்பர் வகைகள், பெயின்ற் வகைகள் மற்றும் தரமான உள்ளீட்டுப் பொருட்களுக்கான மூலதனப் பொருட்கள், அழிபொருட்கள், வாத்தியக்கருவிகள், விளையாட்டுப் பொருடகள், அலுவலக அலுமாரி, அலுவலக மேசைகள், பயில் அலுமாரி, கம்பியூட்டர் மேசைகள், புத்தக ராக்கைகள், ஆய்வுகூட இரசாயனப் பொருட்கள், ஆய்வுகூட உபகரணங்கள், O.H.P புறஜெக்ரர் மற்றும் 'அறிவு அமுது', 'அந்திவானம்' பதிப்பகங்களின் பதிப்புக்கள், வெளியீடுகள் யாவற்றையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

குறிப்பு:-

"பாடசாலை மாணவர்களின் நன்மைகருதி சனிக்கிழமை முழுநாளும், ஞாயிற்றுக்கிழமை மாலை 2 மணி வரை திறந்திருக்கும் என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்"

ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்

021 222 5542 (சி-1934) 212, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

# ஜனாதிபதி பதவியை நீடிக்க உள்ளமை ஜனநாயக விரோத நடவடிக்கையாகும்

## அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கூறுகிறார்



(கொழும்பு)

ஜனாதிபதி பதவிக்காலத்தை நீடிக்க எடுக்கும் முயற்சி - ஜனநாயகத்துக்கு விரோதமான செயல் என அமைச்சரவைப் பேச்சாளர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

அமைச்சரவையின் முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது -

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது பதவிக்காலத்தினை 2006 ஆம் ஆண்டுவரை அதிகரிக்கும் எண்ணம் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது ஜனநாயக விரோதமானதும், அரசியல் யாப்புக்கு முரணான செயலாகும். அவ்வாறு அவர் தனது பதவிக்காலத்தினை அதிகரிப்பதாயின், நாடாளு மன்ற அங்கீகாரம் பெற்ற பின்னர் பொது மக்களின் ஆணையையும் பெறுதல்வேண்டும்.

அவ்வாறு செய்யாமல் பதவிக்காலத்தை நீடிப்பதென்பது - கடும் விமர்சனத்துக்குரிய செயலாகும். இது நடைபெறாதென்றே நாம் நம்புகிறோம். இதேநேரம் மாகாணசபைத் தேர்தல்கள் ஒரேநாளிலேயே இடம்பெறவுள்ளதுடன், சனிக்கிழமைகளில் இந்தத் தேர்தல் இடம்பெறவும் ஒழுங்கு செய்யப்படவுள்ளது. மாகாண சபை உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், அரசிற்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையை ஜனாதிபதி ஏற்றிருப்பது வரவேற்கத்தக்கது.

அரசாங்கம் விரைவில் ஜனாதிபதியுடன் பேசவுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (01)



அண்மையில் வடமராட்சி கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளை யாழ்.மாவட்ட இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால சந்தித்துக் கலந்துரையாடியதைக் காணலாம்.

# கிறிஸ்தவர்களுக்கு எதிராக சில ஊடகங்கள் செயற்படுவது மனக்கவலையளிப்பதாகவுள்ளது

## இலங்கை தேசிய கிறிஸ்தவ ஒன்றியம் தெரிவிப்பு

(கொழும்பு)

கிறிஸ்தவர்களுக்கெதிரான செயல்களில் சில ஊடகங்கள் செயற்பட்டு வருகின்றமை, கவலைக்குரியதாகவுள்ளது என இலங்கைத் தேசிய கிறிஸ்தவ ஒன்றியம் தெரிவித்துள்ளது.

அண்மைக்காலமாகக் கிறிஸ்தவர்கள்மீது சில குழுக்கள் மேற்கொண்டுவரும் அடாவடித்தனங்கள் குறித்து நேற்று வெளியிட்ட அறிக்கையிலேயே ஒன்றியம் இவ்வாறு தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

பணம், பொருள் முதலியவற்றை வழங்கி, மதம் மாற்ற முயற்சிகளில் ஈடுபட்டு வருவது தண்டனைக்குரிய குற்றமாகும். அவ்வாறான முயற்சிகளில் ஈடுபடும் மதப்பிரிவுகள் தமது செயற்பாடுகளைக் கைவிடுதல் வேண்டும்.

கல்வாரி ஆலயம், ஒல்லாந்து சீர்த்திருத்தசபை, மக்கள் தேவசபை, இரட்சணியசேனை உட்பட ஐந்து சபைகளும் இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ளாதிருக்கின்றன. எனினும், ஏனைய சில சபைகள் அத்தகைய செயல்களில் ஈடுபவடுவது முழுக் கிறிஸ்தவர்களுக்கும் ஈனத்தை உண்டுபண்ணுவதாக உள்ளது.

பௌத்தம், இந்து, முஸ்லிம் மதங்களுடன் ஒன்றிணைந்து செயற்படுவதையே நாம் விரும்புகின்றோம். அதற்கான அற்பணிப்புடன் செயற்படவும் தயாராக உள்ளோம்.

அண்மைக்காலமாக நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல்நிலை கவலையளிப்பதாக உள்ளது. இதனை மாற்றி, நாட்டில் சமாதானம் தோன்ற எமது ஒத்துழைப்பு என்றும் வழங்கப்படும்.

அண்மைக்காலமாகக் கிறிஸ்தவ ஊழியர்கள் மீதும், தேவாலயங்கள் மீதும் மேற்கொள்ளப்பட்டுவரும் தாக்குதல் சம்பவங்கள் கவலையளிப்பதாக அமைந்துள்ளது.

ஒரு சில கோஷ்டியினரின் இத்தகைய நடவடிக்கைகள், மேலும் வருந்தத்தக்கவகையில் அமைந்துள்ளதுடன், சில ஊடகங்களும், சுவரொட்டிகளும் - கிறிஸ்தவர்கள் மீது ஏனைய மதத்தவர்கள் வெறுப்புக்கொள்ளும் வகையில் செயற்பட்டு வருகின்றமை அரசால் தடுத்து நிறுத்தப்படல்வேண்டும் எனவும் இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பெருவிழா

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் அப்போஸ்தலரான முத்திப்பேறுபெற்ற யோசவ்வாஸ் யாத்திரைத்தல பெருவிழா பண்ணையில் நடைபெறவுள்ளது.

நாளை பி.ப. 4.30 மணிக்கு நற்கருணை வழிபாடு, மறுநாள் காலை 7.30 மணிக்கு பெருவிழா திருப்பலியும் இடம்பெறவுள்ளது.

# மன்னார் அபிவிருத்திப் பணிகளுக்கு 300 மில்லியன் ரூபா ஒதுக்கீடு!

(மன்னார்)

மன்னார் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக உலகவங்கியின் உதவியுடன் நிக்கொட் நிறுவனம் இம்முறை 300 மில்லியன் ரூபாவைச் செலவிடவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு நிக்கொட் நிறுவனம் 200 மில்லியன் ரூபாவை மன்னார் பகுதி அபிவிருத்திப் பணிகளுக்குச் செலவிட்டிருந்தது. இம்முறை மேலும் 100 மில்லியன் ரூபாவைச் செலவிட்டு, அதிகளவு அபிவிருத்திப்பணிகளை முன்னெடுக்கவுள்ளது.

இந்தமுறை கல்வி, சுகாதாரம் முதலியவற்றின் அபிவிருத்திக்கே அதிக முக்கியத்துவம் வழங்கவுள்ளதாகவும், மன்னார் அரச செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# பாதுகாப்பு விடயங்களை ஆராய உயர்மட்டக்குழு இந்தியா சென்றது

(புதுடெல்கி)

இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையில் பாதுகாப்பு தொடர்பான விடயங்களை ஆராய, இலங்கையின் படைப் பிரிவைச் சேர்ந்த உயர்மட்டக்குழு ஒன்று நேற்றுமுன்தினம் இந்தியா சென்றுள்ளது.

நான்கு பேர்கொண்ட இந்தக் குழு - மூன்று நாள் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ளது. இதில் பாதுகாப்பு செயலர் சிறில் ஹேரத், கூட்டுப் படைத்தளபதியும் இராணுவத் தளபதியுமான லெப்ரினண்ட் ஜெனரல் லயனல் பலகல்ல, சட்டத்தரணி றிகெல் கட்ச் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இவர்களின் இந்த விஜயத்தின் போது, இருநாடுகளுக்குமிடையேயான பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடுவர் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

(01)

# ஜனாதிபதி அடுத்த ஆண்டு நவம்பரின்பின் பதவியிலிருந்து விலகுவதே சிறந்த வழி

## அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அடுத்த ஆண்டு நவம்பர் மாதத்துடன் முடிவடையும் தனது பதவியிலிருந்து விலகிக்கொள்வதே சிறந்த வழியாகும்.

இவ்வாறு வர்த்தக நுகர்வோர் பாவனையாளர் அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

தனது பதவிக்காலத்தை மேலும் ஒருவருடம் நீடிப்பது தொடர்பாகச் சுயாதீன தொலைக்காட்சி ஒன்றுக்கு ஜனாதிபதி தெரிவித்தது தொடர்பாக, அமைச்சர் கருணாநாயக்க - தனது அமைச்சில் செய்தியாளர் மாநாடொன்றை நடத்தியிருந்தார். அதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி தனது பதவிக்காலத்திற்கும் மேலதிகமான நாட்களுக்குப் பதவியைத் தக்கவைத்துக் கொள்வது, நாட்டின் அரசியலமைப்புக்கு முரணான செயலாகும்.

ஜனாதிபதியினாலேயே நாட்டின் சட்ட ஒழுங்கை மீறும் செயல் தற்சமயம் மேற்கொள்ளப்படுகிறது. இது நாட்டின் பொருளாதாரத்தில் பாரிய வீழ்ச்சியை ஏற்படுத்தும் நடவடிக்கையாகும். அத்துடன், அடுத்த வருடம் நவம்பர் மாதத்திற்குப் பின்னர் ஜனாதிபதி தெரிவிக்கும் எந்தவொரு நடவடிக்கையையும் செயற்படுத்தவோ, ஏற்கவோ போவதில்லையெனவும் அமைச்சர் தெரிவித்தார்.

(01)

### மனித உரிமை ஆணைக்குழுவினால்

# சுவிஸ் அரசின் நிதியுதவியுடன் புதிய வேலைத்திட்டம் அறிமுகம்

(கொழும்பு)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு 30 லட்சம் ரூபா செலவில் வேலைத்திட்டம் ஒன்றினை மேற்கொள்ளவுள்ளது. சுவிஸ் அரசாங்கத்தின் உதவியுடன் இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவிருக்கிறது.

ஒருவரைக் கைதுசெய்து, சித்திரவதைக்கு உள்ளாக்குவது என்பது தொடர்பாக, மனித உரிமைகள் ஆணைக்குழு - பொலிஸாருக்கு விளக்கங்களை வழங்கவுள்ளது.

சித்திரவதை செய்யப்பட்டு சிறையில் அநியாயமாகக் கொல்லப்படுகின்ற செயற்பாடுகளை எதிர்காலத்தில் இல்லாமல் செய்யும் நடவடிக்கையாகவே இந்த வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

இது தொடர்பாகத் துறைசார்ந்த அறிஞர்களின் உதவியுடன், அவர்களின் ஒத்துழைப்புப் பெறப்பட்டு, இந்த வேலைத்திட்டம் மனித உரிமை ஆணைக்குழுவால் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

(01)

# இணக்கப்பாடு எட்டப்படாத நிலையில் சுகாதார ஊழியர்கள் தொடர் வேலைநிறுத்தம்

சுகாதார ஊழியர்கள் தொடர்ந்தும் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுவது என்ற தீர்மானத்தை எடுத்திருக்கின்றனர்.

நேற்றுமுன்தினம் அமைச்சரவை உபகுழுவோடு சுகாதார ஊழியர்கள் நடத்திய பேச்சுவார்த்தைகளில் எந்தவிதமான இணக்கப்பாடுகளும் எட்டப்படாதநிலையில், தொடர்ந்தும் சுகாதார ஊழியர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவது என தீர்மானம் எடுத்துள்ளனர்.

அமைச்சர்களான கரு ஜெயசூர்யா, தயாரத்ன, காணி அமைச்சர் ராஜித சேனாரத்ன ஆகிய மூவரும் இந்த அமைச்சரவை உபகுழுவில் இடம்பெற்றுள்ளனர்.

சுகாதார ஊழியர்கள் - அமைச்சரவை குழுவினருடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்ததையடுத்து, சுகாதார ஊழியர்களின் நிறைவேற்றுக்குழு உடனடியாக வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவது எனத் தீர்மானித்தது.

அரசாங்கம் தங்களுக்கு உரிய முறையில் சம்பள நிலுவைக் கொடுப்பனவை வழங்காதநிலையில், தாம் தொடர்ந்தும் வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவது என நிறைவேற்றுக்குழு தீர்மானித்தது. (01)

# உயர்பாதுகாப்புவலய, மீன்பிடி பிரச்சினைகளில் படிப்படியான மாற்றங்களைக் கொண்டுவரமுடியும்

## யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி தெரிவிப்பு

உயர்பாதுகாப்பு வலயம், மீன்பிடிப்பதற்கான நடைமுறைபோன்றவற்றில் படிப்படியான மாற்றங்களையே கொண்டுவரமுடியும். உடனடியாக எந்தவொரு மாற்றத்தையும் கொண்டுவருவது சிரமம் என யாழ்.இராணுவத்தளபதி சுசில் சந்திரபால தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் யாழ்.ஆயர் இல்லத்தில் நடைபெற்ற சந்திப்பொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் -

மிதிவெடி அகற்றுவது மிகவும் தாமதமாகவே இடம்பெற்று வருகின்றது. அந்த வேலைகள் ஓரளவு முடிவடையுமபோதுதான், மக்களிடம் உயர்பாதுகாப்பு வலயப்பகுதிகளைப் பாவனைக்கு விடமுடியும்.

மீன்பிடிக்காக ஆழ்கடலுக்குச் செல்வதற்கான அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது. இது முன்னர் இருந்தநிலையைவிட, மீனவர்க்குப் போதுமானதாக உள்ளது. மேலும் சில சலுகைகளை வழங்க முயற்சிக்கின்றோம். அதேபோல் கேரதீவு-சங்குப்பிட்டி பாதையைத் திறக்கவும் முயற்சி எடுக்கின்றோம்.

இராணுவம் தங்கியுள்ள மக்களின் வீடுகளுக்கு வாடகை வழங்கப்பட்டு வருகின்றது. அவ்வாறு வாடகை கிடைக்காத வீட்டு உரிமையாளர்கள் எம்முடன் தொடர்பு கொண்டு அவற்றைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

ஏ - 9 பாதையின் முகமாலை-ஓமந்தைச் சாவடிகளை 24 மணி நேரமும் திறந்துவைத்து, மக்கள் போக்குவரத்தை நடத்துவதற்கு செஞ்சிலுவைச்சங்கத்தினர் சாதகமான பதிலெதனையும் இதுவரையில் வழங்கவில்லை. அவர்கள் உடன்பட்டால் அது சாத்தியமாகும்.

உயர்பாதுகாப்பு வலயத்துள் உள்ள பாடசாலைகளுக்குப் பெற்றோர் மற்றும் வெளியார் உள்நுழைவதாயின், பாடசாலை அதிபரின் அனுமதிக்கடிதம் வைத்திருந்தால், அவர்கள் உட்செல்லத் தடை இருக்காது எனவும், அவர் அங்கு மேலும் தெரிவித்தார். இந்தச் சந்திப்பில் யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம், சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான குழுவின் தலைவர் ஆர்.அருமைநாயகம், நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்த பரமாச்சாரிய சுவாமிகள் முதலானோர் கலந்துகொண்டனர். (ப, ஜெ)

### வருடாந்த பொதுக்கூட்டம்

சாவகச்சேரி வணிகர் மன்றத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும், வெள்ளிவிழாவும் நாளை மறுதினம் காலை 9 மணிக்கு டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. மன்றத் தலைவர் என்.சற்குணராஜா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் அமரர் நமசிவாயம் நினைவாக புலமைப் பரிசில்கள் வழங்கப்படவிருக்கிறது.

# நாவாந்துறையில் திருட்டில் ஈடுபட்ட பெண் கிளிநொச்சியில் காவல்துறையால் கைது!

## பிரசவத்திற்கு அனுமதிக்கப்பட்ட வேளையில் சம்பவம்

(நாவாந்துறை)

நாவாந்துறையிலுள்ள வீட்டில் திருட்டில் ஈடுபட்ட தம்பதிகளில், மனைவி கிளிநொச்சியில் வைத்து தமிழீழ காவல்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பிரசவத்திற்காகக் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டிருந்த வேளையிலேயே இவர் கைது செய்யப்பட்டதாகத் தெரி விக்கப்படுகிறது.

நாவாந்துறையிலுள்ள நூல் கட்டும் ஆசீர்வாதம் என்பவரது வீட் டிலிருந்து கடந்த இருவாரங்களுக்கு முன்னர் பெறுமதிவாய்ந்த நகைக ளும், பல இலட்சம் ரூபா பணமும் திருட்டுப் போயிருந்தன.

திருட்டு நடைபெற்ற அன்றைய தினமிரவு ஆசிர்வாதத்தின் வீட்டில் தங்கியிருந்த அவரது உறவினர்க ளான தம்பதிகள் இருவரும் காலை காணாமற் போயிருந்தனர்.

இவர்களே திருட்டில் ஈடுபட்டதைத் தெரிந்துகொண்ட வீட்டுக்காரர் - பத்திரிகை மூலமாக தம்பதிகள் இரு வரது புகைப்படத்தையும் பிரசுரித் திருந்தார்.

அந்த விளம்பரத்தின் பிரகாரம் கிளிநொச்சி வைத்தியசாலையில் பிரசவத்திற்காக அனுமதிக்கப்பட்டி ருந்தபோதே சுபாசினி சுபாஸ்கரன் என்ற பெண் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டார்.

இவரிடமிருந்து இரண்டு இலட் சம் ரூபா பணமும், சில பவுண் நகை களும் மீட்கப்பட்டுள்ளன. இவரது கணவர் மீதி நகை, பணத்துடன் தலைமறைவாகிவிட்டார்.

இவர் தொலைபேசி மூலமாகத் திருட்டுப்போன வீட்டுக்காரரை மிரட்டி வருவதாகவும் தெரிவிக்கப் படுகின்றது. (ச)

# மன்னாரில் சேதமடைந்த வைத்தியசாலைகள் 17 மில்லியன் ரூபா செலவில் புனரமைப்பு

மன்னார் மாவட்டத்தில் மேற் கொள்ளப்பட்ட படை நடவடிக்கைக ளினால், சேதமாக்கப்பட்ட விடத்தல் தீவு, அடம்பன், பண்டிவிரிச்சான் மற் றும் வெள்ளாங்குளம் பகுதியிலுள்ள வைத்தியசாலைகள் - 17 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இந்த வருடம் ஜூன் மாதம் - விடத்தல்தீவு, அடம்பன் வைத்திய சாலைகள் மீளத்திறந்து வைக்கப் படும் எனவும், மிகுதி இரண்டு வைத் தியசாலைகளும் இந்த ஆண்டு டிசம்பர் மாதம் திறந்துவைக்கப்படும் எனவும் மன்னார் மாவட்ட அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மன்னார் ஆதார வைத்தியசாலையில் மகப்பேற்று நிலையம் - 20 மில்லியன் ரூபா செலவில் மூன்று மாடிகளைக் கொண்ட கட்டடமொன்றும் கட்டப் பட்டு வருகிறது. (201)

## குடியிருப்பு பகுதியில் கல்லுடைக்கும் ஆலை

# அகற்றுமாறு கோரி அப்பிரதேச வாசிகள் மனித உரிமை அலுவலகத்தில் முறைப்பாடு

கரணவாய் கரவெட்டிக்கு அண் மையாக மக்கள் குடியிருப்புப் பகுதி யில் கல்லுடைக்கும் ஆலை ஒன்று அமைக்கப்படுகின்றது. இது மக்கள் மத்தியில் பாதிப்பை ஏற்படுத்தும் என அந்தப் பிரதேசத்து மக்கள் - மனித உரிமைகள் ஆணைக்குழு வில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்தக் கல்லுடைக்கும் ஆலைக்கு 300 மீற்றர் தூரத்தில் பாடசாலை ஒன்று அமைந்துள்ளது. அண்மை யில் விவசாய நடவடிக்கை மேற் கொள்ளப்படுகிறது. பாவனை யிலுள்ள கிணறுகளும் பல உள் ளன. இந்து மயானமொன்றும் உள் ளது. இவற்றின் செயற்பாடுகள் அனைத்தும் இதன்மூலம் பாதிப் படையுமென அப்பிரதேச மக்கள் யாழ்.மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர். இதற்கான தீர்வை விரைவில் எடுக்கு மாறு, அந்தப்பிரதேச மக்கள் அந்த முறைப்பாட்டில் மனித உரிமைகள் ஆணைக்குழுவைக் கேட்டுள்ளனர்.

# கைப்பணியாளர்கள் ஒன்றியம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது

கைப்பணியாளர் ஒன்றியம் எனும் அமைப்பு கடந்த 6 ஆம் திகதி யாழ். மாவட்டத்திலும் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது. யாழ். செய லகத்திலுள்ள தொழில்துறை செய லகத்தில் நடைபெற்ற இந்த அங் குரார்ப்பண நிகழ்வில், தேசிய அருங்கலைகள் பேரவையைச் சேர்நத அலுவலர்களும், தொழில்துறைத் திணைக்கள அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

மொத்தம் 11 பேரைக்கொண்ட தாகத் தெரிவுசெய்யப்பட்ட செயற் குழுவில், யாழ்.மாவட்டத்தின் பல பாகங்களிலுமுள்ள கைப்பணியாளர்க ளும் இடம்பெறுகின்றனர். இந்தக் குழுவினரின் முதலாவது செயற் குழுக்கூட்டம் பெப்ரவரி மாதம் 6 ஆம் திகதி யாழ்.தொழில்துறைத் திணைக்களத்தில் நடைபெறவுள் ளது. இந்தக்கூட்டத்தில் உறுப்பினர் கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட் டுள்ளது. பன்னவேலை சிற்பவேலை, மரவேலை, பொம்மைவேலை, வர்ணம் தீட்டுதல், தும்புவேலைகள் போன்ற பணிகளை மேற்கொண்டவர்களே, இந்த ஒன்றியத்தில் அங்கம் வகிக் கின்றனர். (ச)

## சின்னஞ்சிறு செய்திகள்

### விளையாட்டுக் கழகங்களுடனான கலந்துரையாடல்

பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கான கலந்துரையாடல் ஒன்று - இன்று யாழ்.செயலக மாநாட்டு மண்டபத்தில் பி.ப.3 மணிக்கு, விளையாட்டுத்துறை யாழ்.மாவட்ட அதிகாரி தலைமையில் இடம்பெற வுள்ளது. இந்தக் கலந்துரை யாடலில்- யாழ்.மாவட்ட விளையாட் டுத்துறையினால் 2004 ஆம் ஆண்டு மேற்கொள்ளவுள்ள சிறப்பான திட் டங்கள் பற்றி ஆராயப்படவுள்ளது.

எனவே, பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு கழகத்தி லுமிருந்து தலைவர், செயலாளர்க ளைக் கலந்துகொள்ளுமாறு மாவட்ட விளையாட்டுத்துறை அதி காரி கேட்டுகொள்ளுகிறார்.

### வீடியோ படக்காட்சி

• யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத் தின் ஏற்பாட்டில் - நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப.10 மணிக் குப் புவியியற்றுறை மண்டபத்தில் 'அபர்ணா சென்னின்' நெறியாள்கை யில் உருவாக்கப்பட்ட "மிஸ்ரர் அண்ட் மிஸிஸ் ஐயா" என்ற ஆங்கி லப்படம் காண்பிக்கப் படும்.

படத்தின் இறுதியில் எழுத்தா ளர்கள் சு.ஜேசுராசா, க.சட்டநாதன் ஆகியோரின் நெறிப்படுத்தலின்கீழ் படம் பற்றிய கலந்துறையாடல் இடம்பெறும்.

### வருடாந்த பொதுக்கூட்டம்

தென்மராட்சி பிரதேச செயலக நலன்புரிக் கழகத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும், ஒன்றுகூடலும் எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கி ழமை காலை 9 மணிக்கு நுணா வில் கிழக்கு அமிர்தாம்பிகை வித் தியாலயத்தில் நடைபெறும்.

நலன்புரிக் கழகத்தின் வளர்ச்சி நடவடிக்கை சம்பந்தமான பிரேர ணைகளைச் சமர்ப்பிக்க விரும்பும் கழக அங்கத்தவர்கள் - பிரேரணை களைக் கழக செயலரிடம் சமர்ப் பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (24)

### பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சதுரங்க சம் மேளத்தினால் நடத்தப்படும் வருடாந் தப் போட்டிகளுக்கான பரிசளிப்பு வைபவம் - நாளைமறுதினம் ஞாயிற் றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் நடைபெறவுள்ளது.

சென்றமுறை இடம்பெற்ற போட் டிகளுக்கான பரிசில்களும் இந்த வைபவத்தில் வைத்து வழங்கப்படும். இந்த வருடப்போட்டிகள் தற்போது யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் மாலை 3 மணி தொடக்கம் நடை பெற்று வருகின்றன.

# ஆபாசப்படப்பிரதி எடுத்துவந்த இருவர் கைதாகியுள்ளனர்!

## ஓமந்தைச் சோதனைச்சாவடியில் சம்பவம்

ஆபாசப்படப்பிரதி கொண்டுவந்த வர்கள் எனும் சந்தேகத்தின் பெய ரில், இளைஞர் இருவர் விடுதலைப் புலிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஓமந்தைச் சோதனைச் சாவடியில் நடைபெற்ற இந்தச் சம்பவம் தொடர் பாக மேலும் தெரியவருவதாவது - கடந்த திங்கட்கிழமை கொழும்பிலி ருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த சொகுசு பஸ் ஒன்றை, ஓமந்தைச் சோதனைச்சாவடியில் வைத்து புலிகள் சோதனையிட்ட போது, பஸ்ஸின் இருக்கையொன்றின் கீழ் இருந்து சீ.டி. பிரதியொன்றைக் கைப்பற்றினர்.

சந்தேகத்தின் பேரில் இந்தப் பிரதியைத் தொலைக்கட்சியில் போட்டுப் பார்த்தபோது, ஆபாசப் படப்பிரதியாக இது இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பிரதியை எடுத்து வந்த வர் தொடர்பாக விசாரித்தபோது, உண்மை வெளிவராமையால், சந் தேகத்தின் பேரிலே இளைஞர் ஒரு வரும், சிறுவனும் விடுதலைப் புலி களால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

விசாரணைகள் மேற்கொள்ளப் பட்டு வருவதாகவும், விசாரணையின் முடிவில் உரியவர் கண்டுபிடிக்கப் படின் இருவருடங்களுக்குக் குறை யாத சிறைத்தண்டனை வழங்கப்பட லாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. விசாரணைகளின்போது, சிறுவன் முதற்தடவையாகவே கொழும்புக்குச் சென்றுள்ளமையும், குறித்த இளை ஞர் வெளிநாட்டிலிருந்து வந்துள்ள மையும் தெரியவந்துள்ளது.

ஆனால், இளைஞரின் கடவுச் சீட்டு சட்டவிரோதமாக உள்ளதாக வும், உரியமுறையில் பதிவுகள் மேற் கொள்ளப்படவில்லையெனவும் தெரி விக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தால் காலை பத்து மணிக்கு யாழ்.நகரை அடை யவேண்டிய சொகுசு பஸ் சேவை மாலை மூன்றுமணிக்கே வந்து சேர்ந்தமை குறிப்பிடத்தக்கது. (02)

### சொற்பொழிவு நிகழ்வு

இந்து சமய கலாசார அலுவல் கள் அமைச்சு நடாத்தும் ஆன்மீக தொடர் சொற்பொழிவு தொடரில் இன்று சைவப்புலவர் கா.கமலநாதன் சொற்பொழிவாற்றவுள்ளார். மாலை 5 மணிக்கு நாவலர் மணிமண்டபத் தில் சிவ.மகாலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் திரு வாசகத்தேன் எனும் தலைபபிலேயே சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

# திணைக்களங்களின் வருடாந்த வருமானம் கணிப்பிடும் பணிகள் ஆரம்பிக்கப்படுகிறது

மாகாண அமைச்சுக்களின்கீழ் செயற்படும் திணைக்களங்களின் மொத்த வருடாந்த உற்பத்தியின் அளவைக் கணிப்பிடும் செயற்பாடு கள் தற்போது நடைபெற்று வரு வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நடவடிக்கையின்கீழ் வடக்கு - கிழக்கு மாகாணசபைக் குட்பட்ட திணைக்களங்களின் வரு டாந்த வருமானத்தை கணிப்பிடும் நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தில் தொழில் திணைக்களத்தின் கீழ் செயற்படும் நெசவு நிலையங்கள், தச்சுத் தொழிற்சாலைகள், தும்புத் தொழிற் சாலை, மரவேலை பயிற்சிக் கூடங் கள் என்பவற்றிலிருந்து பெறப்பட்ட வருமானங்களும் கணிப்பீடு செய் யப்பட்டு வருகின்றன.

உற்பத்தி மற்றும் கைத்தொழில் சார்ந்த ரீதியிலான திணைக்களங் கள் அனைத்திலும் இவ்வாறான கணிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையங்கள் வாரியான தகவல்களை சேகரிப்பதற்குத் திணைக்களத் தலைவர்கள் தமது பூரண ஒத்துழைப்பை வழங்கவேண் டுமென மாகாணசபை கேட்டுக்கொண் டுள்ளது. (ச)

# தீ விபத்துக் காரணமாக கணவன் மனைவி காயம்

குப்பி விளக்குத் தட்டுப்பட்டதால், ஏற்பட்ட தீ விபத்தால் கணவன், மனைவி இருவரும் தீக்காயங்க ளுக்கு உள்ளானநிலையில் நேற்று முன்தினம் இரவு யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்கள்.

பாக் றோட் - குருநகரைச் சேர்ந்த எஸ். குயிந்தன் (வயது - 33), கு.றோகினி (வயது - 27) ஆகிய இருவருமே காயமடைந்த நிலையில், யாழ். போதனாவைத் தியசாலையில் அனுமதிக்கப்பட் டுள்ளவர்களாவர். (ப)

# பெயர் மாறாட்டம் செய்த நபருக்கு ஒருவருட கடூழிய சிறைத்தண்டனை

பெயர் மாறாட்டத்தில் ஈடுபட்ட ஒருவருக்கு இரு வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒரு வருட கடூ ழிய சிறைத்தண்டனையும், இரண் டாயிரம் ரூபா அபராதமும் நீதிமன் றால் விதிக்கப்பட்டுள்ளது. கசிப்பு உற்பத்திசெய்த குற்றமொன்றிற் காகக் கைதுசெய்தபோதே, பொலி ஸாருக்குத் தவறான பெயர், விலா சம் என்பவற்றைக் கொடுத்ததாக வும், ஆனால் விசாரணைக ளின்போது உண்மையான பெயர் தெரியவந்ததாகவும் நீதிமன்ற வட் டாரங்கள் தெரிவித்தன.

நீதிமன்ற நடைமுறைகளை மீறியதுடன், பொலிஸாரின் கட மைகளை இழிவுபடுத்தியதாகவும் தெரிவித்தே இவருக்கு இந்தத் தண்டனையை நீதிவான் இ.த.விக்ன ராஜா தெரிவித்தார். (ச)



யாழ். திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தின் புதிய பான்ட் அணியினையும், பொறுப்பாசிரியர்களையும் படத்தில் காணலாம்.



சிநேகிதியே

# வித்தியாசமான கண்ணாடி ஓவியம்



கிளாஸ் பெயிண்டிங் பற்றிக் கேள்விப் படடிருப்பீர்கள்... அதென்ன ரிவேர்ஸ் கிளாஸ் பெயிண்டிங்?

இதுவும் ஒருவித கிளாஸ் பெயின்டிங்தான். ஆனால், இந்தப் பெயின்டிங்கில் எல்லாவற்றையும் தலைகீழாகத்தான் வரையவேண் டும். அதற்காக உருவத்தையே தலைகீழாக வரையவேண்டும் என்பதில்லை. வரையும்முறைகள் மட்டும் தலைகீழ் வரிசையில் அமையும். உதாரணமாக நாம் வழக்கமாகச் செய்யும் எல்லா பெயின்டிங்குகளிலும், ஓவியத்தை வரைந்துவிட்டு பின்பு கை, கால், முகம் போன்ற பகுதிகளை நிறந் தீட்டிவிட்டு, அதற்குரிய வெளி உருவை வரைந்து நிறம்தீட்டி விட்டுத்தான் முழு உருவத்திற்கும் வெளி உருவை வரையவேண்டும். இந்த முறை யில் எல்லாம் தலைகீழ். அதனால் தான் இதற்கு ரிவேர்ஸ் கிளாஸ் பெயிண்டிங் (தலைகீழ் கண்ணாடி வர்ணப் பூச்சு) என்று அழைக்கப்படுகின்றது.

இதை கிளாஸ் பெயின்டிங் போலவே கண்ணாடியில்தான் செய்யவேண்டும். இதை வீட்டிலே சுலபமாகச் செய்வதன்மூலம் சிறந்த பலனைப்பெறமுடியும்.

ஏற்கனவே சொன்னதுபோல இந்த பெயின்டிங் வெளி உருவைத்தான் முதலில் வரையவேண்டும். நீங்கள் வர்ணம் தீட்டவிருக்கும் மாதிரி படத்தை கண்ணாடியின் அடியில் வைத்துக்கொள்ளுங்கள்.

பின்னர் கறுப்பு நிற வர்ணப் பூச்சுகளை மாதிரி படத்தின் முழுவெளி உருவையும் கண்ணாடியின்மேல் அப்படியே வரைந்தெடுத்துக்கொள்ளுங்கள். இப்போது படம் தயார்.

மாதிரி படத்திற்கு வர்ணம் பூசவிருக்கும் நிறங்களில் இரண்டு வகையுண்டு. ஒன்று ஓவியர்கள் பயன்படுத்தும் நிறம் மற்றையது மாணவர்கள் எளிதாகப் பயன்படுத்தக்கூடிய ரியூப்களில் அடைக்கப்



பட்ட ஒயில் நிறங்கள். இதைவிட மாணவர்களுக்கான ஒயில் நிறங்கள் விலையில் குறைவு பயன்படுத்துவதில் மிகவும் சுலப மாகும்.

நாம் வர்ணம் தீட்டவிருக்கும் மாதிரிப் படமானது, கேலிச்சித்திரமாக இருந்தால் கண்கள், மூக்குப்பகுதி மற்றும் தலைப் பகுதிகளைக் கறுப்பு நிற ஓயில் பெயிண்டினால் வர்ணம் தீட்டவேண்டும்.



வழக்கமாக நாம் தண்ணீரில் கரைக்கக்கூடிய வோட்டர்கலர்களைத்தான் படத்திற்கு வர்ணம் தீட்டப் பயன்படுத்துவோம். அந்த நிறம் கொஞ்சம் கட்டித் தன்மையாக இருந்தால், சிறிதளவு நீர் சேர்த்து அதை நீர் சேர்க்கச் செய்த பின்பே பயன்படுத்துவோம். ஆனால், இந்த வர்ணப் பூச்சில் செய்த பின்பே பயன்படுத்துவோம்.

ஆனால், இந்த வர்ணப் பூச்சில், நாம் பாவிக்கவிருக்கும் ஒயில் நிறங்களுக்கு நீர் கலக்கக்கூடாது. அப்படியே கலந்தாலும், ஒயில் பெயின்ட் நீங்காது. இதை நீங்கள் கலப்பதற்கென்றே சிறப்பாக அதற்கென லின்சீட் ஒயில் என்ற திரவம் கடைகளில் விற்கப்படுகின்றது. இதைக்



கொண்டுதான் பெயின்டை நீங்கச் செய்யவோ அல்லது ஒரு பெயின்டோடு மற்றொரு பெயின்டைக் கலக்கவோமுடியும்.

இப்போது படத்தின் முகத்துக்கு நிறங்கள் அடிப்பதைப் பற்றிப்பார்க்கலாம் - கறுப்பு நிறத்தோடு சிவப்பு நிறத்தைக் கலந்துகொள்ளுங்கள். இப்படிக் கலந்தால், கடும்மஞ்சள் நிறம் கிடைக்கும். இதை முகத்தின் வெளியுருவிற்கு கீழே முகப்பகுதியில் அடர்த்தியான இன்னொரு வெளியுருவை வரையவேண்டும். பின் சிறிதளவு பஞ்சு எடுத்து இந்த வர்ணத்தின்மேல் லேசாக ஒற்றி எடுப்பதால் வர்ணம் சீராக்கப்படும். இப்படி செய்யும்போது, வர்ணம் கறுப்புநிறத்தால் வெளியுருவிற்கு வெளியில் போகாமல் பார்த்துக்கொள்ளுங்கள். மரூண் நிறத்தால் முகத்துக்கான நிறத்தை அடித்துவிடவேண்டியதுதான். இதற்கு தயாராகவிருக்கும் மரூண் கலருடன் சிறிதளவு வெள்ளை நிறத்தைச் சேர்த்து விட்டால் மெல்லியநிறம் கிடைத்துவிடும். இதை முகப்பகுதி மற்றும் கைப்பகுதிக்கு தூரிகையினால் நிரப்புங்கள் பிறகு சிறிதளவு பஞ்சுவைத்து வர்ணம் சீராக்கும்படி ஒற்றி எடுக்கவும். இப்படி ஒற்றியெடுப்பதால், அந்தந்தப் பகுதிகளின் உருவம் அழகாக இருக்கும். இதுதான் இந்தப் பெயின்ரிங்கின் சிறப்பம்சமாகும். பின்பு பொம்மையின் உடலுக்கான நீலநிறம், தலைக்கான கறுப்புநிறம், உடைக்கான நிறமாகச் சிவப்பு என்பவற்றைக் கொடுத்துப் பஞ்சினால் ஒற்றியெடுங்கள். இப்படியே முழு ஓவியத்தையும் முடித்துவிட்டு, வெளியுருவிற்கு மெல்லிய நீல நிறத்தால் கொடுத்துவிட்டு அதையும் பஞ்சினால் ஒற்றியெடுத்தவுடன் கண்ணாடி பெயிண்டிங் நிறைவாகும்.

இந்த வர்ணப்பூச்சானது நன்றாகக் காய குறைந்தது பத்து நாட்களுக்கும் மேலாகும். காய்ந்தபிறகு வெள்ளைநிற மட்டையைக் கண்ணாடியின் அளவுக்கு வெட்டி படத்தின் பின்புறமாக ஒட்டிவிடவேண்டும். இனி இதை பிரேம் செய்யும் கடைகளில் கொடுத்து வாங்கி உங்கள் சுவரில் தொங்கவிடவேண்டியதுதான். இதை நீங்களும் முயற்சித்துப் பாருங்கள். கொஞ்ச நாளிலேயே நீங்களும் திறமைசாலி ஆகிவிடுவீர்கள்.

# பெண்குழந்தையின் வாழ்வுக்கு வித்திடுங்கள்



ஒரு விருட்சம் நன்றாக வளர்ந்து கிளைபரப்பி நல்ல பயனைத் தரவேண்டுமானால், அதற்குச் சிறந்த விதை அவசியம். அதேபோல - ஒரு கட்டடம் நீண்ட காலத்திற்கு நிலைத்து நிற்க வேண்டுமாயின் உறுதியான அத்திபாரம் அவசியம்.

இவற்றை ஒத்ததே குழந்தைகளின் வளர்ப்பும். ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும். இவை பழமொழி மாத்திரமல்ல மெய்வாக்கும் ஆகும்.

ஆணாதிக்கம், பெண்ணடிமைத்தனம் போன்ற சொற்பதங்கள் மேலை நாடுகளைக் காட்டிலும் கீழைத்தேயங்களிலேயே அதிகம் பேசப்படுகின்றன. ஒரு குழந்தை பிறந்ததுமே ஆணா? பெண்ணா? என்று பார்க்கிறார்களே தவிர, அதனை ஒரு குழந்தையாக யாரும் பார்ப்பதில்லை.

'பெட்டையை இப்பிடிக் கறுப்பாப் பெத்தா நாளைக்கு இவளைத் தேடி யார் வருவான்' என்றும் அதுவே ஆண் குழந்தையாக இருந்தால், 'ஆனை கறுத்தாலும் ஆயிரம் பொன் பெறும்' என்று தலை நிமிர்த்திக் கூறுகின்றனர். ஆக, குழந்தைகள் பற்றிய பாகுபாடு பிறந்ததுமே நிர்ணயிக்கப்படுகின்றது.

அந்தக் குழந்தை விளையாடும் பருவத்தை எய்தியதும், விளையாட்டுப் பொருட்கள் வாங்கும்போது, பெண் பிள்ளைகளாயின், மண்சட்டி, பானை, வளையல்கள் எனவும் ஆண்பிள்ளைகளாயின், துப்பாக்கி, கார் போன்றவற்றை வாங்கிக் கொடுக்கின்றனர். இவற்றின்மூலம், பெண்கள் அழகிகளாகவும், சமையல்காரிகளாகவும் வளரவேண்டும் என்றும், ஆண்கள் வீரபுருஷர்களாக வளரவேண்டும் என்றும் பெற்றோர் அந்தச் சிறுவயதிலேயே அடிக்கல் நாட்டுகின்றனர்.

சிறுவயதில் ஒரு பெண்பிள்ளை மரத்தில் ஏறி மாங்காய் பறித்தால், பெண்பிள்ளையை வளர்திருக்கின்ற இலட்சணம் என அவளது தாயைப் பழிக்கும் இதே சமூகம் அதுவே ஆண்பிள்ளையாக இருந்தால் 'சாண் பிள்ளை என்றாலும் ஆண்பிள்ளை" என மார்தட்டிக் கொள்கிறது. இத்தகைய சமூக எண்ண ஓட்டங்கள் மாறினால்தான் வருங்காலத்தில் ஆரோக்கியமான சமுகத்தைக் கட்டிஎழுப்பமுடியும். இதற்கு என்ன செய்யவேண்டும்?

பெற்றோர்களே! இது உங்கள் கைகளில்தான் உள்ளது. ஒரு குழந்தையின் முதல் பாடசாலை குடும்பம் தான். ஆண்பிள்ளை - தேனீர் கலத்தல், வீட்டை சுத்தமாக வைத்திருத்தல், தனது உடைகளைத் தானே சுத்தம் செய்தல், சமையலுக்கு உதவுதல் போன்ற தொழில்களைத் தெரிந்திருப்பதனால் அவன் குறைபட்டவன் ஆகமாட்டான்.

இதேபோன்று, ஒரு பெண்பிள்ளை கடைக்குச் சென்று, பொருட்களின் தரத்தினை அறிந்து, பொருட்களை வாங்குதல், வீட்டின் திருத்தவேலைகளைச் செய்தல், இயந்திரங்களைப் பழுதுபார்த்தல் போன்றவேலைகளை அறிந்திருப்பதால், அவளின் பண்புகள் மாறுபட்டுவிடாது.

எனவே, பெற்றோர்களே! இன்ன இன்ன வேலைகளைச் செய்யவேண்டும் என்ற வரைமுறை இல்லாமல், எல்லாவேலைகளையும் எல்லாப் பிள்ளைகளும்செய்து பழகுகின்ற பொறுப்பு உங்கள் கையிலேயே உள்ளது.

பெண்கள் - ஆண்கள் என்ற வேறுபாடின்றிக் குழந்தைகளை மனிதப் பண்பும் மனித நேயமும்கொண்ட பிரஜைகளாக வளர்த்தெடுங்கள். யாரிலும் தங்கி வாழுகின்ற தன்மை கொண்டவர்களாக அல்லாமல், சுயாதீனமானவர்களாக வாழ வழிகாட்டுங்கள். எனவேதான் இன்றே வித்திடுங்கள்!

- திருமதி ரஜிதா நகுலன் -

# பனிகாலத்தை தக்க வைக்க

சருமத்தில் தான் எத்தனை வகைகள், எத்தனை எத்தனை நிறங்கள்? இப்படிப் பலதரப்பட்ட சருமங்கள், பலதரப்பட்ட சீதோஷ்ண நிலைக்கேற்ப பல்வேறு மாற்றங்களுக்குட்படுகிறது. பனிக்காலம் வந்துவிட்டாலே சொல்லவா வேண்டும். சருமத்திலும் எணணற்ற பிரச்சினைகள் வந்துவிடும். பலருக்கு சருமம் வறண்டு பொலிவிழந்து காணப்படும்.

இப்படி இழந்த பொலிவைப் பனிக்காலத்திலும் எப்படித் தக்கவைத்துக் கொள்ளலாம் என்று இங்கு நாம் பார்ப்போம்.

எமது சருமம் எவ்வகையையானது என்பதை நாம் முதலில் கண்டறிந்து, அதற்கேற்றாற்போல் அதைப் பராமரித்து வருவது நல்லது. கூடுதலான வரையில் நமது உணவு வகைகளில் நல்ல தரமான பச்சைக் காய்கறிகள் மற்றும் தண்ணீர் நிறையக் குடிப்பது நல்லது.

பனிக்காலங்களில் முகத்தில் ஏற்படும் வறட்சியைத் தவிர்க்கச் சிறிது சந்தன மற்றும் விற்றமின் E கலந்து முகத்தில் தேய்த்து மென்மையாக மசாஜ் செய்து, 15 நிமிடம் கழித்து கழுவிவிட சருமம் நன்கு மினுமினுப்படையும்.

உதட்டில் ஏற்படும் வெடிப்பு நீங்க பாலாடையோடு தூயதேங்காய் எண்ணெய் கலந்து மிருதுவாகத்தடவி, ஒருமணிநேரம் கழித்துக் கழுவிவிடவும்.


குறிப்பாக பனிக்காலம் ஆயுர்வேத உடல் மசாஜ்களுக்கு உகந்த நேரமாகும். ஆகையால், உடலுக்குப் பொலிவு தரக்கூடிய மசாஜ்களைச் செய்துகொள்வதன் மூலம் சருமம் மிகவும் பளிச்சென்று அழகாகத்திகழும். தோலில் ஏற்படும் சுருக்கமும் நீங்கி, சருமம் மிளிர்ந்து புத்துணர்ச்சி ஏற்படும்.

பொதுவாக நாம் குளிக்கும்போது, ஒலிவ் எண்ணெய் தேய்த்து மசாஜ் செய்து, 15 நிமிடம் கழித்துக் குளித்தால், சருமம் செழுமையாகக் காட்சியளிக்கும். பனிக்காலங்களில் பழங்கள், காய்கள் மற்றும் பூக்கள் உபயோகித்து முக ஒப்பனை செய்துவர, முகம் நன்கு பொலிவுபெறும்.

# பிறப்புமுறையின் தவறான விளக்கங்களால் திசைமாறிப்போகும் குடும்பச் சூழல்

(சென்றவாரத் தொடர்ச்சி...)

பரம்பரை அலகுகள் நூல்போன்ற இழையங்களுக்குள் நெடுக்கு வரிசையில் அடக்கப்பட்டிருக்கும். இவை நிறமூர்த்தங்கள் (**Chromsomes**) என அழைக்கப்படும். நிறமூர்த்தங்கள் வேறு



பட்ட நீளங்களை உடையதாக இருக்கும். ஒவ்வொரு நிறமூர்த்தத்திற்கும் ஒரு சோடி இருக்கும். நிறமூர்த்தங்கள் கருவினுள் வைக்கப்பட்டிருக்கும்.

ஒவ்வொரு உயிருக்கும் குறிப்பிட்ட நிறமூர்த்த எண்ணிக்கை உண்டு. மனிதனின் நிறமூர்த்த எண்ணிக்கை - 46. அதாவது, 23 சோடி. கருக்கட்டல் நிகழும்போது, ஆணிலிருந்து பெறப்பட்ட விந்து - பெண்ணினால் தோற்றுவிக்கப்பட்ட முட்டையுடன் இணையும் என அறிந்தோம்.

இவை இணையும்போது, இவற்றில் கருக்களும் இணையும். கருக்கள் இணையும்போது, அவற்றிலிருந்த நிறமூர்த்த எண்ணிக்கை - மனிதனின் நிறமூர்த்த எண்ணக்கையைவிட, 46 ஆக இருந்தால், அவை இணையும்போது இரட்டிப்பாகலாம். இதற்காகச் சேருகின்ற கலங்கள் (புணரிகள்) பாதி நிறமூர்த்த எண்ணிக்கைள்க் கொண்டிருக்கும். அதாவது, நிறமூர்த்த எண்ணிக்கை 23 ஆக இருக்கும்.

இவை இணையும்போது, பூரணநிறமூர்த்த எண்ணிக்கை பெறப்படும். அதே சமயம் இயல்புகள் கலக்கப்படுவதற்கும் வசதிகள் ஏற்படுகின்றன.

பரம்பரை பரம்பரையாக இயல்புகள் கலக்கப்பட்டுக்கொண்டே வந்திருப்பதினால், மனித இனமானது நன்றாக கலக்கப்பட்டதொன்றாகும். இதனால், மனித இனத்தின் தூயபோதம் என்று ஒன்றில்லை எனலாம்.

எனவே, மனிதனின் நிறம், தோற்றம் போன்ற குண இயல்புகளுக்கு - பரம்பரை அலகுகள் (**D.N.A**) அல்லது சந்ததிச் சுவடிகள் (**Genes**) காரணமாக அமைவதால், இதனை தாயாலோ அல்லது தந்தையாலோ மட்டும் தீர்மானிக்கமுடியாததாகும்.

ஆகவேதான், இதன் அடிப்படைப் பிரச்சினைகளை புரிந்துகொள்வதன் ஊடாக - தேவைற்ற குடும்பச் சச்சரவுகளை, அதாவது பிள்ளைகளின் தோற்றம், நிறம்போன்ற இயல்புகளில் இனிமேலாவது சந்தேக உணர்வுகளைத் தவிர்த்து, குடும்ப வாழ்வில் ஒற்றுமையாக வாழ்தல் வேண்டும்.

ஆனால், இன்றைய விஞ்ஞானமானது - கடைகளில் தாம் விரும்பிய ஆடைகளையோ அல்லது உணவினையோ ஓடர் செய்துபெற்றுக்கொள்வதுபோல, பிள்ளைகளையும் பெற்றுக்கொள்ள வழிவகுத்துள்ளது. இந்தவகையில் ஒருவர் தனக்கு விரும்பிய நிறத்தில், தனக்குப் பிடித்த குணவியல்பில் பிள்ளைகளைப் பெற்றெடுக்கும் வாய்ப்புக் காணப்படுகிறது.

மருத்துவமனைகளிலே மேதைகள், விளையாட்டு வீரர்கள், அரசியல் தலைவர்கள் போன்றவர்களின் விந்துக்களையும், முட்டைகளையும் பாதுகாத்து வைத்திருக்கின்றன. இவை மருத்துவமனைகளில் காணப்படும் இரத்தவங்கி போன்று விந்து வங்கி (**Sperm Bank**) என்றும், முட்டை வங்கி (**Egg Bank**) என்றும் காணப்படுகின்றன.

இந்த வங்கிகளில் இவற்றுடன்கூட, அவற்றுக்குரிய சுயவிருப்பக்கோவையும் (**Bio Data**) காணப்படும். எனவே நாம் கடைகளில் துணிமணி தேர்ந்தெடுப்பதுபோன்று, எமக்குத் தேவையானதை தேர்வுசெய்து, நாம் விரும்பியபடி குழந்தைகளைக் கருக்கட்டல் செய்து சொந்தக் கருப்பையிலோ அல்லது இரவல் கருப்பையிலோ வளரச்செய்து, குழந்தைகளைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

எனவே, நாம் இனி எமக்குப் பிடித்த அழகையும், அறிவையும் தேர்வுசெய்து பெற்றுக்கொள்வதனூடாக எங்களது குழந்தைகளை அழகானவர்களாகவும், மிகுந்த அறிவுடையவர்களாகவும் பெற்றுக்கொள்ளலாம். (ஆனால், இவை பிறப்புரிமை இயல்பின் அடிப்படையில் முட்டாள்களாகவும், முரடர்களாகவும் தோன்ற வாய்ப்புண்டு.)

**மலட்டுதன்மை (மகவீன்மை)**

ஒரு பெண் கருத்தரிப்பதில் அவளது சினைக்குழாய்கள் முக்கிய பொறுப்பு வகிக்கின்றன. சினை முட்டைகள் உருவாகாமல் போனாலோ அல்லது தொற்று நோய் மற்றும் தேவையற்ற கொழுப்புக்களினால் சினைக்குழாயில் சதைத்திரட்சி ஏற்பட்டு அடைப்பு ஏற்பட்டாலோ - பெண்கருத்தரிப்பில் பிரச்சினை ஏற்படுகிறது.

இதேபோல், ஆண்விந்தும் முக்கிய பங்களிக்கின்றது. எனவே, ஆணானவன் எந்த விதக்கோளாறும் இல்லாமல் கணிசமான அளவு விந்தை வெளியேற்றவேண்டும். அத்துடன், விந்து தீர்ந்துபோகாமல் கெட்டியாக இருத்தல் அவசியமாகும். மேலும், அதிக எண்ணிக்கையில் உயிரணுக்கள் இருந்தாலும், அவை சினைமுட்டைகளைச் சென்றடைந்து நீந்தும் தன்மைகொண்டிருந்தலும் மிகமுக்கியமானதாகும். இத்தகைய சிறப்பியல்புகளைக் கொண்ட தன்மையாக ஆண்களின் விந்துக் கட்டமைப்பும் மலட்டுத்தன்மைக்கும் காரணமாக அமையலாம்.

இவற்றினைவிட, ஆண்விந்தின் மாறுபட்ட உருவ அமைப்பும், பெண்களின் கருப்பை அகப்படல் சுழற்சியும் குழந்தையின்மைக்குக் காரணமாக அமையலாம். ஆகவேதான், இங்கு மலட்டுத்தன்மைக்கு ஆணோ அல்லது பெண்ணோ அல்லது இருவருமோ காரணமாக அமையலாம். இவற்றை மருத்துவப் பரிசோதனையூடாக அறிந்துகொள்ளமுடியும்.

எனினும், ஒரு வீட்டில் பிள்ளைப் பேறின்மை காணப்படுமாயின், அது பெண்ணின் குறைபாடே என எழுந்தமான முடிவு செய்யப்பட்டு - மாமிமார்களால் மருமகள்கள் கொடுமைகது உட்படுத்தப்படுவதையும், பின் அவை விவாகப் பிரிவு என்றநிலைக்கு இட்டுச்சென்று விடுவதையும் காணலாம். எனவே, இத்தகைய அடிப்படை நிலைமைகளை மாமிமார் - மருமகள்மார் (இன்றைய மருமகள்தான் நாளைய மாமியார்) புரிந்துகொண்டு, சுமூகமான வாழ்கை நடத்தல்வேண்டும்.

இன்றைய விஞ்ஞானமானது - மலட்டுத்தன்மையைப் போக்கி, மகவினை பெற்றுக் கொடுக்கும் அளவிற்கு வளர்ச்சி பெற்றுள்ளது. இதனை நாம் பயன்படுத்துவதனூடாக இத்தகைய பிரச்சினைகளை இலகுவில் தீர்த்துக் கொள்ளலாம்.

தாயின் கருப்பையில் குழந்தை வளர முடியாதிருந்தால், அல்லது வேறு காரணங்களினால் தாயினால் கருவைச் சுமக்கமுடியாதிருந்தால், அந்தக் கருவைச் சுமப்பதற்குத் தாதியை ஏற்படுத்தமுடியும். மனைவியின் முட்டையை எடுத்து, கணவனின் விந்தினால் கருக்கட்டல் செய்து, ஏற்ற ஊடகத்தில் முளையத்தை வளரச்செய்து, (**Test tube baby**) முளையம் ஒரு குறிப்பிட்ட பருவத்தை அடைந்ததும், முளையத்தை தாதியினது கருப்பையில் புகுத்தி வளரச்செய்யலாம்.

இது மாற்றான் தாயின் உடலில் விருத்தி அடைந்து பிறந்தாலும், இவர்களின் குழந்தை என்பவதோடு, இவர்களின் தசையும், இரத்தமும் சேர்ந்த பத்து மாதம் சுமக்காமல் பெற்ற சொந்தக் குழந்தையாகும்.

இதேபோன்றே ஆண் ஒருவர் மலட்டுத்தன்மையுடையவராகக் காணப்படின், அவர் 'விந்துத்தானம்' மூலம் விந்துவை பெற்றுக்கொள்ளலாம். பிரச்சினைகளைத் தவிர்த்துக்கொள்வதற்காக மருத்துவ மனையிலேயே (விந்து வங்கி) விந்து வெளியேற்றப்பட்டு வழங்கப்படுதல் வேண்டும். வேறு இடத்தில் என்றால் 30 நிமிடங்களில் விந்து மருத்துவமனையை அடைந்து விடுதல் வேண்டும்.

இவ்வாறு பெறப்பட்ட விந்து நன்கு சுத்திகரிக்கப்பட்ட நிலையில் நேரடியாகக் கருப்பையில் செலுத்தப்படுகிறது. இவ்வாறு ஆண் விந்துவை தனியாகப் பிரித்தெடுத்துச் செயற்கை முறையில் பெண்ணின் சினை முட்டைக்குள் செலுத்தும் செயற்கைச் சிகிச்சை முறையினை (**Intra uterin Insemination (IVI)** என்று அழைக்கப்படுகின்றது.

எனவே, இனி "மலடி" என்ற சிறப்புப் பெயரினை எல்லோரும் தவிர்ப்பதற்குச் சிறந்ததிட்டம் கைவசம் உள்ளதால், பயன்படுத்தி பயன்பெறலாம். எனினும், இவை செலவுகூடிய முறையாக அமைவதால் ஏழைகள் மத்தியில் பெரும் தவிர்ப்புநிலையினையே ஏற்படுத்திவிடும் எனலாம்.

இத்தகைய அடிப்படைப் பிறப்புமுறை விளக்கங்களின் விஞ்ஞானரீதியான விளக்கங்களைப் பெறுவதனூடாக குடும்ப வாழ்க்கையில் ஏற்படும் தப்பபிப்பிராயங்கள் நீக்கப்பட்டு, குடும்ப சூழலில் அமைதிநிலை உருவாக வழி ஏற்படுவதுடன், எதிர்காலத்தில் அவர்களினதும், அவர்கள் சார்பான குழந்தைகளினதும் வாழ்க்கை வளமாக அமைய வழிபிறக்கும் என்பதில் ஐயமில்லை.

சே. ஜெயாநந்தன்
புறநிலை விரிவுரையாளர்
தொழில்நுட்பக் கல்லூரி, யாழ்ப்பாணம்

# அலுவலகத்தில் நடந்துகொள்ளும் முறைகள்

உங்களுடன் பணியாற்றுபவர்கள் எந்த வயதினராக இருந்தாலும் - அவர்களிடம் மரியாதையாகவும், கனிவாகவும் பேசுங்கள்.

அலுவலகத்திற்கு சற்றுத் தாமதமாகப் போனாலும் அதிகாரியிடம் போய் காலை வணக்கம் கூறிப்புன்னகையுங்கள். தவறு உங்களுடையதாக இருந்தால் யாராக இருப்பினும் தயங்காமல் அவைகளை நேராகச் சந்தித்து மன்னிப்புக் கேளுங்கள்.



அலுவலகத்துக்கு வந்ததும், அந்த நாளுக்குரிய வேலையைத் திட்டமிடுங்கள். உங்களுடைய நாட்குறிப்பில், அதிகாரிக்கு நினைவுபடுத்தவேண்டிய காரியங்கள் நியமனங்கள் போன்றவற்றைக் குறித்துவைத்துக்கொள்ளுங்கள். முடிந்த அளவு அடிக்கடி அலுவலக விடயமாகத் தொடர்புகொள்ளும் தொலைபேசி, பக்ஸ் எண்களை மனதில் குறித்து வைத்துக்கொள்வது உங்களுக்கு நற்பெயரைத் தேடித்தரும்.

ஒரு சிறிய வேலையானாலும்,அதை ஆத்மதிருப்தியுடன் செய்யுங்கள். அந்தவேலை முடிந்ததும் உங்கள் மனதில் ஒரு புத்துணர்ச்சியை உணர்வீர்கள்.

உங்களுடைய மேலதிகாரி ஓய்வாக இருக்கும்போது, அவருடன் அமர்ந்து உங்களுடைய வேலைபற்றி, அதில் உங்களுக்குள்ள ஈடுபாடு, பிரச்சினைகள், உங்களை நீங்கள் மேம்படுத்திக்கொள்ளும் விதம்பற்றி விவாதியுங்கள்.

அலுவலகத்தில் வயதில் பெரியவர்கள் இருந்தால், ஓய்வு நேரங்களில் அவர்களுடைய அனுபவங்கங்களைக் கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள். உங்களுடைய வாழ்க்கை ஓட்டத்துக்கு இது உதவும். உங்களுடன் பணியாற்றுபவர்கள் வேலை நேரத்தில் தேவையில்லா பேச்சு அரட்டை இதெல்லாம் இங்கு வேண்டாமே.... என்பதுபோல் அர்த்தமாகப் புன்னகையுங்கள்.

உங்களிடம் உதவிகூறிவரும் நபர்களுக்கு நியாயமான உதவிகளை உங்கள் பதவிகளை உபயோகித்துச் செய்வதற்குத் தயங்காதீர்கள். இப்படிச் செய்வதன்மூலம், உங்களுக்குத் தெரியாமல் ஆளுமைத் தன்மையும், தன்னம்பிக்கையும் அதிகரிக்கும்.

உங்கள் வாழ்க்கைத் துணையின் நிறைகளைப்பற்றி மட்டுமே பேசுங்கள். மறந்துபோய் குறைகளைப் பற்றிப்பேசாதீர்கள். அவரிடமுள்ள நல்ல குணங்களை உரையாடலின்போது, சுவைபடக்கூறுங்கள். இது மற்றவர்களிடம் உங்களுக்கு மிகுந்த மரியாதையை ஏற்படுத்திக்கொடுக்கும். அதற்காக என் கணவர் நல்லவர் வல்லவர் என்று எப்போதும் கணவர் புராணம் பாடினால், அதன்பின்பு உங்களைப் பார்த்தாலே உங்கள் தோழிகள் தலைதெறிக்க ஓடுவார்கள். முடிந்தவரை உங்கள் வீட்டு விடயங்களை அலுவலகத்தில் பேசுவதைத் தவிர்த்துவிடுங்கள்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

குணன்இலனாய்க் குற்றம் பலவாயின் மாற்றார்க்கு
இனன்இலனாம் ஏமாப்பு உடைத்து

-திருக்குறள்.

## நமது நோக்கு

### அதிகார, அகங்கார அரசியல் போக்கு...

அகங்காரம் என்பது, அதனைக் குணாம்சமாகக் கொண்ட எவருக்கும் ஏதோ ஒருவகையில், ஏதோ ஒரு காலத்திலாவது ஆபத்தை ஏற்படுத்தும் ஒன்றாகும் .

அதுவும் ஆட்சி அதிகாரத்துடன் அதியுயர் பதவிகளில் இருப்போரின் அகங்காரம் ஒட்டு மொத்தமாக ஒரு தேசத்தின் அமைதிக்கும், வளர்ச்சிக்கும் அபாயத்தை உண்டுபண்ணும் என்பதில் சந்தேகமே கிடையாது. சிறிலங்காவில் என்றைக்கு நிறைவேற்று அதிகார பலம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறை நடைமுறைக்கு வந்ததோ அன்று பிடித்த 'சனி' இன்னமும் தொடர்ந்து கொண்டிருப்பதுதான் அவலம்தரும் விடயமாகும் அகங்காரமும், பழிவாங்கும் குரூர அரசியல் சாணக்கியத்தனமும் கொண்ட பேரினவாத அரசியல் தலைவரான ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவினால் பல்வேறு உள்நோக்கங்களுடனும், ராஜதந்திர ரீதியிலான மூலோபாயத்தை அடிப்படையாகக் கொண்ட திட்டமிடல்களுடனும் வடிவமைக்கப்பட்ட நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறைக்கான அரசியல்யாப்பானது, நாடாளுமன்ற ஜனநாயகத்தை முற்றாகவே நிராகரித்து அவமதிக்கும் தன்மை கொண்டதாகும்.

நாட்டை நிர்வகிக்கும் சகல அதிகாரங்களையும் ஜனாதிபதி என்ற தனிமனிதரிடம் குவியச்செய்யும் தன்மை கொண்டதான இந்த அரசியல் யாப்பானது, பிரதமர் என்ற பதவியை ஜனாதிபதி வேண்டியபடியெல்லாம் தனது அதிகார வலுவைப் பயன்படுத்தி ஆட்டிவைக்கும் தன்மை கொண்டதாக மாற்றியதால், நாடாளுமன்ற நிர்வாகக் கட்டமைப்பினை வெறும் சம்பிரதாயத்திற்கான அமைப்பாக்கிவிட்டது எனலாம்.

இந்த அரசியல் யாப்பின் பிரகாரம் ஜனாதிபதி எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருக்கின்றாரோ, அதேகட்சியே நாடாளுமன்றத்திலும் பெரும்பான்மை பலம்பெற்று, அக்கட்சியைச் சேர்ந்த ஒருவரே பிரதமராகவும் பதவியேற்பாரானால், சிக்கலற்றதும், ஜனாதிபதியின் அபிலாஷைகளுக்கேற்றதானதுமான ஒரு கட்சி அமையும்.

ஆனால், ஜனாதிபதி ஒரு கட்சியையும், நாடாளுமன்றத்தின பிரதமராக இருப்பவர் அவருக்கு எதிரான கட்சியையும் சேர்ந்தவராக இருந்து, இருவருக்கும் இடையில் புரிந்துணர்வுடன் கூடிய தேசிய நோக்கு இல்லாதிருக்குமேயானால், என்ன நடக்கும் என்பதற்கு இன்றைய சிறிலங்காவின் நிலை சிறந்த உதாரணமாகும்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை அமுலுக்கு வந்தது முதல், சிறிலங்காவின் ஜனாதிபதியாக பதவி வகித்தவர்களான - ஜே.ஆர்.ஜெயவர்த்தனா, ரணசிங்க பிரேமதாஸ ஆகியோரின் ஆட்சிக்காலத்தில், ஜனாதிபதியும் பிரதமரும் ஒரேகட்சியைச் சேர்ந்தவர்களாக விளங்கியதால், ஆட்சிக்குள் உள்முரண்பாடுகளுடனான நெருக்கடிகள் எதுவும் இருந்ததில்லை என்றே கூறமுடியும்.

அத்துடன், இந்த இருவரும் தமது அதிகார ஆளுமையாலும், அகங்கார அணுகுமுறைகளாலும் தமது கட்டுப்பாட்டுக்குள அனைத்து நிர்வாகச் செயற்பாடுகளையும் பூரணமாகவே வைத்திருக்கவும் செய்தனர்.

ஜெயவர்த்தனாவும் சரி, பிரேமதாஸவும் சரி தமது அதிகார பலத்தை மேலாதிக்கம் செய்யுமளவிற்கு எவரையும் விட்டுவைத்ததுமில்லை, தமது அபிலாஷைகளுக்கு எதிராக கருத்துக்கூறக்கூட எவரையும் அனுமதித்ததுமில்லை.

அந்தவகையில் அவர்களின் அகங்காரம் பிரசித்தமானது. ஆணவம் இறுக்கமானது.

சிறிமா பண்டாரநாயக்காவை சிறையுள் அடைக்குமளவிற்கு, அவரது குடியியல் உரிமைகளை இரத்துச் செய்யுமளவிற்கு, தமிழ்மக்களை நோக்கி யுத்தமா, சமாதானமா என்று பகிரங்கமாகவே கேட்குமளவிற்கு ஜே.ஆரின் அகங்காரம் தலைக்கேறியிருந்தது.

பிரேமதாஸவும் ஜே.ஆருக்கு சளைத்த ஒருவரல்ல... இந்தியப்படையை தேதி குறிப்பிட்டு அதற்குள் வெளியேற வேண்டும் என்று கட்டளையிடும் தொனியில் கூறுமளவிற்கு, அவரின் அதிகாரபலம் அவருக்கு அகங்காரத்தையும் அளித்திருந்தது.

இந்த இருவரும் சிறிலங்காவை தமது அதிகார பலத்துடன் கூடிய அகங்காரத்தால் எப்படியெல்லாம் ஆட்சி செய்தார்கள் என்பதை விளக்கிக்கூற வேண்டியதில்லை.

இவர்களின் பின்னர் பதவியேற்ற சந்திரிகாவின் தலைமை எப்படியெல்லாம் செயற்பட்டதென்பதற்கு, அவரது தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணியின ஏழாண்டு கால ஆட்சி சான்றாகும்.

ஆனால், கடந்த பொதுத்தேர்தலின் பின்னர் நாடாளுமன்றத்தை ரணில் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணியிடம் பறிகொடுத்த பின்னர் சிறிலங்காவில் இரட்டை ஆட்சிகளின் பலப்பரீட்சை தீவிரமாகியது.

கடந்த இரண்டாண்டு சமாதான சூழலில் சந்திரிகா தனது அதிகாரத்தை அகங்காரத்துடன், முழுமையாகப் பயன்படுத்த தொடங்கியுள்ள இன்றைய காலகட்டம், அவரது பாரம்பரிய இயல்பை வெளிப்படுத்த ஆரம்பித்துள்ளது.

முதலல் நாடாளுமன்றத்தில் ரணிலின் அதிகாரங்கள்மீதான தனது ஆதிக்கத்தை வெளிப்படுத்தி, மூன்று அமைச்சுக்களை தன்வசம் அபகரித்ததன் மூலம், சமாதான முயற்சிகளுக்கு ஆப்பு வைத்தார்.


இப்போது 2005 இல் முடியவேண்டிய தனது பதவிக் காலத்தை 2006 வரை - தேவையெனில் தன்னால் நீடிக்க முடியும். அதற்கான அதிகாரம் தன்னிடம் உள்ளது என அறிவித்துள்ளார்.

இப்போது தேர்தல் நடத்த வேண்டிய தேவை இல்லை... இருந்தாலும் - அதை நடத்தவோ, நடத்தமால் விடவோ தீர்மானிப்பதும் நான்தான் என்றும் அவர் ஆணவத்துடன் கூறியுள்ளார்.

இவையாவும் அதிகார அரசியல் தலைமையின் அகங்கார வார்த்தைகளாகவே உணரப்படுகின்றது. இது சிறிலங்காவின் அரசியல் நெருக்கடியை மேலும் சிக்கலாக்கவும் சமாதான முயற்சிகளை சிதைக்கவுமே பயன்படும் என்பதில் ஐயமில்லை.

இதுதான் அவரின் இலக்காகவும் இருப்பதால், அவர் அதைப்பற்றிக் கவலைப்படப்போவதுமில்லை. அதிகாரமும், அகங்காரமும் இணைந்தால் அழிவை விடவும் வேறெதை அறுவடை செய்யமுடியும்?

## நாடும் நடப்பும்




# நிதி மோசடி குற்றச்சாட்டில் அதிகாரி பதவி விலக்கப்பட்டார்

(கொழும்பு)

மத்திய மாகாணசபையின் அபிவிருத்திக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியை மோசடிசெய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் - அதிகாரி ஒருவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டதுடன், 15 பேர்மீதான விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

கடந்த வருடம் மத்திய மாகாணசபையினால் திணைக்களங்களின் அபிவிருத்திக்கென நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டிருந்தன. எனினும், அதற்குரிய நிதி செலவிடப்பட்ட போதிலும், குறிப்பிட்ட திட்டத்திற்கான வேலைகள் பூர்த்தி செய்யப்படவில்லை என புகார் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பாக அரசாங்க கணக்காய்வுக் குழு மேற்கொண்ட ஆய்வின்போது, 16 அதிகாரிகளும் மோசடியில் ஈடுபட்டனர் எனக் கணக்காய்வு அறிக்கைகள் மூலம் தெரியவந்தன.

கணக்காய்வுக் குழு மேற்கொண்ட ஆய்வறிக்கையை - மத்திய மாகாண சபை முதலமைச்சர் வசந்த அலுவிகாரவிடம் சமர்ப்பித்திருந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக அதிகாரி ஒருவர் பதவியிலிருந்து விலக்கப்பட்டதுடன், ஏனைய 15 பேர்மீதான விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருப்பதாக மாகாண சபைகள் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.(01)

# ஜனாதிபதியை காரணம் காட்டி பிரதமர் பேச்சுவார்த்தையிலிருந்து விலகக்கூடாது

## பத்தேகம சமிந்த தேரர் தெரிவிப்பு

ஜனாதிபதியின் நடவடிக்கையை காரணம்காட்டி - பிரதமர் சமாதான முயற்சிகளில் இருந்து இடைவிலகுவதானது, நியாயமற்றதாகும் என பொதுமக்கள் ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் பத்தேக சமிந்த தேரர் தெரிவித்தார்.

பிரதமர் - சமாதான முயற்சிகளில் இருந்து விலகிக் கொள்வது, மக்கள் அவருக்கு அளித்த ஆணையை மீறுவது போன்றதாகும். அரசியலமைப்பின்படி ஜனாதிபதியுடன் இணைந்து பிரதமர் செயற்படும் போதுதான் நீடித்த சமாதானம் உருவாகமுடியும்.

அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தையே முதன் முதலில் முன்வைத்தவர் ஜனாதிபதியே. தற்பொழுது பிரதமரும் அதனையே வலியுறுத்துகிறார். எனவே, இருவரும் இணைந்து செயற்படுவதே நாட்டு நலனுக்கு நல்லது.

சமாதானத்தை உருவாக்குவதற்கு தற்போது ஏற்பட்டுள்ள வாய்ப்பை ஜனாதிபதியும், பிரதமரும் தகுந்த முறையிலே பயன்படுத்தி, நாட்டை பேரழிவில் இருந்து பாதுகாக்க வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

# தட்டெழுத்தாளர்கள் 600 பேருக்கு விரைவில் நியமனம் வழங்கப்படும்

## வஜிரஅபேயவர்த்தன தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

600 தட்டெழுத்தாளர்களுக்கு நியமனம் வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை, பொது நிர்வாக அமைச்சர் வஜிர அபேயவர்த்தன மேற்கொண்டுள்ளார்.

1999 ஆம் ஆண்டு நடைபெற்ற தட்டெழுத்தாளர்களுக்கான போட்டிப் பரீட்சையில், தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கே இந்த நியமனம் வழங்கப்படவுள்ளது.

இவ்வாறு நியமனம் பெறவுள்ளவர்களில் 35 பேர் யாழ். மாவட்டத்திலிருந்தும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். கொழும்பு மாவட்டத்திலிருந்து 42 பேர் தெரிவாகியுள்ளனர். இவர்களில் மூவர் தமிழர்கள் எனத்தெரிவிக்கப்படுகிறது.

ஏனைய மாவட்டங்களிலிருந்தும் குறிப்பிட்ட தொகையினர் தெரிவாகியுள்ளனர். இவர்களுக்கான நியமனங்கள் விரைவில் வழங்கப்படவுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நியமனத்தை அடுத்து புதிய நியமனங்கள் வழங்கப்படும் என்றும், அதற்கான நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பிரதேச சபை அதிகாரிகள் மீது தாக்குதல் 3 சந்தேக நபர்களும் விளக்கமறியலில்

பதுளை பிரதேச சபையொன்றில் பிரவேசித்து, இரண்டு அதிகாரிகளையும், இரண்டு உறுப்பினர்களையும் தாக்கிய சம்பவம் தொடர்பாக, மூன்றுபேருக்கு பதுளை நீதிமன்றம் எதிர்வரும் 24 ஆம் திகதிவரை விளக்கமறியல் விதித்துள்ளது.

டிசெம்பர் மாதம் 2 ஆம் திகதி - குறித்த மூவரும் பிரதேச சபையில் புகுந்து ஊழியர்களையும், அதிகாரிகளையும் தாக்கிய சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவங்கள் தொடர்பாக பதுளை நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் விசாரணை இடம்பெற்றது.

இந்த விசாரணையின்போது பதுளை நீதிவான் இவர்களை எதிர்வரும் 24 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (01)

# சமுர்த்தி பயனாளிகளுக்கு உபகரணங்கள் வழங்கல்

சமுர்த்தி அதிகாரசபையின் சந்தைப்படுத்தல் கருத்திட்டத்தின் கீழ் உபகரணங்களைப் பெற தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கான உபகரணம் கையளிக்கும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சமுர்த்தி பயனாளிகளுக்கான உபகரணங்கள் வைபவ ரீதியாக கையளிக்கப்படவுள்ளன.

பெட்டிக்கடைகளுக்கான கண்ணாடி அலுமாரி, தராசு, தள்ளுவண்டிகள் ஏனைய வியாபார உபகரணங்கள் என்பனவே இவ்வாறு வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (44)

# சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கழகங்களுக்கிடையிலான விளையாட்டு விழா

சண்டிலிப்பாய் பிரதேச செயலளர் பிரிவுக்குட்பட்ட, பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான தடகள விளையாட்டுப் போட்டிகள் நடாத்தப்படவுள்ளன.

2004 ஆம் ஆண்டுக்கான இவ்வருடாந்த தடகள விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றவிரும்பும் வீரர், வீராங்கனைகளின் பெயர் விபரங்களை அனுப்பி வைக்குமாறு அனைத்து கழகங்களுக்கும் அறிவித்தல் விடப்பட்டதுடன், விளையாட்டுக் குழு ஒன்றும் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

இதன்படி - தலைவராக சண்டிலிப்பாய் பிரதேச செயலகரும், செயலாளராக விளையாட்டு உத்தியோகத்தர் மோகனதாசும் உபதலைவராக நிர்வாக அலுவலரும், உப செயலாளராக கிராம அலுவலர் ஒருவரும், பொருளாளராக கிராம அலுவலர் ஒருவருமாக மேலதிக நிர்வாக உறுப்பினர்களாக 15 உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (44)

# இந்த வார பலன்கள்

## 16.01.2004 - 21.01.2004 (திருக்கணிதம்)

| | | | |
|---|---|---|---|
| செவ் | ராகு | | சனி |
| சுக் யுரெ | 17 ப. 01-09 விரு -சந்<br>19 ப. 02-31 தனு-சந்<br>21 ப. 03-13 மக-சந் | | |
| சூரி நெப் | | | குரு |
| | | சுந் கேது | |

### மேடம்

*(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)*

மேடராசியினருக்கு இவ்வாரம் சிறப்பான பலன்கள் தென்படுகின்றன. சகல கருமங்களையும் உற்சாகத்துடன் செய்து வெற்றிபெற வாய்ப்புக்கள் உண்டு. வருவாய் முதலியன சிறப்பாக அமையும். இயந்திரங்களுடன் சம்பந்தப்பட்ட தொழில் செய்வோர் கூடிய வருவாய் பெறுவார்கள். வீட்டில் சுப கருமங்கள் நிகழ இடமுண்டு. அரசாங்க உதவிகளும் கிடைக்கலாம். புதிதாகத் தொழில் தேடுவோருக்குக்கும் நற்பலன் உண்டு. உத்தியோகத்தர்களுக்கு பல சலுகைகளும் பதவி உயர்வுகளும் கிட்டும். குடும்பப் பெண்கள் மனப்பூரிப்புடன் காணப்படுவர். வீட்டில் மகிழ்ச்சியும் குதூகலமும் ஏற்படும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் பெருகும். பற்று வரவுகளில் கூடிய பலன் உண்டு. புதிய வாடிக்கையாளர்கள் அமைவார்கள். மாணவர்கள் கல்வியில் போதிய முன்னேற்றம் காண்பர்.

### இடபம்

*(கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகினி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்)*

இவர்களுக்கு ஏழரைச்சனி பிற்பகுதி நடக்கிறது. நற்பலன்கள் குறைவாகவே இருக்கும். நினைத்த கருமங்களில் தடை தாமதங்கள் காட்டும். குடும்பத்தில் புத்திரர்களால் நன்மை கிடையாது. எதிர்மாறாகச் செலவுகளையே காட்டும். செலவுகள் வருவாயை மிஞ்சிவிடும். குடும்பப் பெண்கள் மனதில் விரக்தியும் சோர்வும் ஏற்படும். பிரயாசைக்கேற்ற லாபம் கிடையாது போகலாம். திருமணப் பேச்சுக்கள் தாமதத்தையும், இழுபறி நிலையையும் காட்டும். உத்தியோகத்தினருக்கு வேலைப்பழு அதிகமாகும். உயரதிகாரிகளுடன் அனுகுமுறையில் அவதானந்தேவை. வர்த்தகர்களுக்கு மந்த நிலையே காட்டும். புதிய முதலீடுகளைத் தவிர்க்கவும். பணக்கஷ்டமும்கூடும். மாணவர்களுக்கு கல்வியில் அக்கறை இராது. ஊக்கம் தேவை.

### மிதுனம்

*(மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள் )*

இந்த ராசியில் பிறந்தவர்களுக்கு நன்மையும், தீமையும் கலந்த பலன்கள் காட்டும். தொடங்குங்கருமங்கள் அலைச்சல் பிரயாசைகளின் மேல் பலன் தரும். குடும்பத்தில் அன்றாடச் செலவுகளைச் சமாளிப்பதில் கஷ்டம் கானும். வாக்குவாதங்களும் பிரச்சினைகளும் தோன்றும். தேவைக்கேற்ற விஷயங்களில் மாட்டிக் கொள்ளாமல் அவதானமாக நடக்கவும். பிரயாசையின் மேல் பணவருவாய் உண்டு. குடும்பப் பெண்களுக்கு மனோநிலை தளப்பமாகவே இருக்கும். உத்தியோகத்தர்களுக்கு உயரதிகாரி களுடன் காரசாரம் ஏற்படும். பொறுமை சாதித்தல் நன்று. அரசாங்க உதவிகளும் இழுபறியில்தான் இருக்கும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சரிவர நடக்காது. புதிய முதலீடுகளைத் தவிர்க்கவும். வாடிக்கையாளர்களை அனுசரிபபது நன்று. மாணவர்களுக்கு சோம்பல் தன்மையால் கல்வி முன்னேற்றம் தடைப்படும். நண்பர்களுடன் பொழுதைக் கழிப்பார்கள்.

### கடகம்

*(புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)*

கடகராசியினருக்கு இவ்வாரம் நற்பலன்கள் சாதாரணமாகவே இருக்கும். குடும்பத்தவர்கள் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து நடப்பார்கள். வெளிநாட்டிலிருக்கும் பிள்ளைகளால் நற்பலன் தூரதேசப் பிரயாணத்தை மேற்கொள்வோருக்கு அனுகூலமான பலன்கிட்டும். திருமணப்பேச்சுக்கள் சற்று தாமதத்தின்மேல் சரிவரும். உற்சாகத்துடன் கருமமாற்றுவார்கள். உதவியாளர்களால் நன்மை உண்டு. வர்த்தகர்களுக்கு பலவிதமாகவும் நற்பலன் உண்டு. வியாபாரம் சிறப்பாக நடக்கும். புதிய வாடிக்கையாளர்கள் சேருவார்கள். மாணவர்கள் கல்வியில் ஊக்கமுடையவர்களாகக் காணப்புடுவர். பெறுபேறுகள் திருப்பதியளிக்கும்.

### சிங்கம்

*(மகம, பூரம், உத்தராடம் 1 ஆம் கால்)*

இவர்களுக்கு இவ்வாரம் மிக நன்று. எடுக்கும் முயற்சிகள் தங்கு தடையின்றி நிறைவேறும். தொழில் சிறப்பாக நடக்கும். வருவாய் அதிகரிக்கும். குடும்பத்தில் சுமுகநிலை தென்படும். புத்திரர்களால் மகிழ்ச்சி உண்டு. உடலாரோக்கியம் பாதிப்பின்றிச் செயற்படும். குடும்பப் பெண்கள் தன்னம்பிக்கையுடனும், மகிழ்ச்சியுடனும் காணப்படுவார்கள். சிலர் தொழில் நிமித்தம் வெளிநாடு செல்வார்கள். உத்தியோகத்தர்களுக்கு தொழிலில் உயர்ச்சியும், வசதியான இடமாற்றங்களும் கிடைக்கும். அதிகாரிகளின் பாராட்டைப் பெறுவார்கள். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடக்கும். வங்கிகளில் வைப்பு அதிகரிக்கும். மாணவர்கள் நல்ல முன்னேற்றம் காண்பர். பரீட்சையில் போதிய மதிப்பெண் பெறுவர்.

### கன்னி

*(உத்தரம் 2, 3, 4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்)*

கன்னிராசிக்காரருக்கு இவ்வாரம் மத்திமமான பலன்களே தென்படுகின்றன. தொழில் முயற்சியில் மந்த நிலையும், தாமதமும் காட்டும். அலைச்சல் பிரயாசை அதிகமாகும். குடும்ப அங்கத்தவர்களிடையே கருத்து வேற்றுமை ஏற்படும். பொறுமையைக் கடைப்பிடித்தால் நன்மை உண்டு. வாழ்க்கைச் செலவு பற்றாக்குறையால் கடன் வாங்க நேரிடும். திட் டமிட்டுச் செலவு செய்தல் நன்று. உறவினர்களால் நன்மை கிடையாது. திருமணப் பேச்சுக்கள் தாமதமடையும். உத்தியோகத்தவர்களுக்கு மன உளைச்சல், உற்சாக மின்மை காணப்படும். உயரதிகாரிகளின் கண்டிப்புக்களும் இருக்கும். வியாபாரிகளுக்கு விற்பனை குறைவாகவே நடைபெறும். கொடுக்கல் வாங்கல் சிக்கல்கள் தோனறும். வங்கி நிலையும் சமாளிப்பது கஷ்டம். மாணவர்கள் கல்வியில் நாட்டம் செலுத்தாமல் விளையாட்டுக்களில் பொழுதைப் போக்குவர்.

### துலாம்

*(சித்திரை 3 ஆம், 4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்)*

இவர்களுக்கு இவ்வாரம் சமபலன் நிகழும். எடுக்கும் கருமங்கள் வெகு சிரமத்தின் மேல் பலிதமாகும். பிரயாசை கூடுமே தவிர வருமானம் குறைவாகவே இருக்கும். குடும்பத்த'ல் சிறு சச்சரவுகள் தோன்றி மறையும். மனைவி பிள்ளைகளால் எதிர்பாராத செலவு உண்டாகும். எதிலும் நிதானமாகச் செயலாற்ற வேண்டும். திருமணம் சம்பந்தமான பேச்சுக்களும் இழுபறியாகவே இருக்கும். புதிதாகத் தொழில் தேடுவோருக்கு காலதாமத்தின் பின்பே கருமம் கைகூடும். ஏமாற்றுப் பேர்வழிகளைப் பற்றியும் அவதானம் தேவை. உத்தியோகத்தவர்களுக்கு கூடுதலாக வேலைசெய்யவேண்டி ஏற்படலாம். உயரதிகாரிகளுடன் வாக்குவாதங்கள் மனஸ்தா பங்கள் தென்படும். வியாபாரிகளுக்கு முந்திய முதலீடுகள் தேங்கிக் கிடக்கும். இவற்றை விற்பனை செய்வது கடினமாக இருக்கும். பண நாட்டம் ஏற்படும். மாணவர்களுக்கு கல்வி முன்னேற்றம் குறைவாகவே இருக்கும். போதிய கவனம் செலுத்தினால் முன்னேற்றம் கிட்டும்.

### விருச்சிகம்

*(விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை)*

விருச்சிக ராசியினருக்கு அட்டமத் துச்சனியும், பத்தில் வியாழனும் தொடங்கிறது. பலவகையாலும் நற்பலன்கள் குறைவு. எடுக்கும் முயற்சிகள் யாவும் அலைச்சல் குறுக்கீடு தாமதம் என்பவற்றை ஏற்படுத்தும். குடும்ப அங்கத்தவர்களிடையே கருத்துவேற்றுமை பிணக்குத் தோன்றும். நண்பர்கள்கூட பகைமை சாதிப்பார்கள். வருவாய் குறைவாக இருப்பினும் செலவு தன்னையறியாமல் வளர்ந்துகொண்டிருக்கும். இதனால் மனவிரக்தியும், நிம்மதிக் குறைவும் தோன்றும். எக்கருமத்தையும் சாதிக்க முடியாமல் தவிப்பர். திருமணப்பேச்சு கைகூடாது. உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பழு அதிகமாகும். அதிகாரிகளுடன் மனஸ்தாபம் ஏற்படும். இடமாற்றம் வசதிகுறைவாக இருக்கும். வியாபாரிகளுக்கு வியாபாரம் மந்த நிலையில் இருக்கும். எதிர்பாராத நட்டம் ஏற்படலாம். மாணவர்கள் கவனக்குறைவால் பரீட்சையில் கோட்டைவிட நேரிடும்.

### தனுசு

*(மகம், பூராடம், உத்தரம் 1 ஆம் பாதம்)*

இவர்களுக்கு பல நற்பலன்கள் காத்திருக்கின்றன. தொழில்துறையில் நல்லலாபம் கிடைக்கும். குடும்பத்தில் கணவன் மனைவி உறவு சிறப்பாக அமையும். நண்பர்களாலும் உறவினர்களாலும் பலவித உதவிகள் கிட்டும். குடும்பப் பெண்கள் உற்சாகத்துடனும் நிம்மதியுடனும் காணப்படுவர். சிலருக்கு திருமண முயற்சி கைகூடி மகிழ்ச்சியான வாழ்வைத் தரும். தொழில் சம்பந்தமாக பிரயாணங்கள் மேற்கொள்வர். அரசாங்க உதவி கிடைக்கலாம். உத்தியோகத்தர்களுக்கு முன்னேற்றமும் ஊக்கப் பணங்களும் கிட்டும். அதிகாரிகளின் நன்மதிப்பைப் பெறுவர். வர்த்தகர்களில் ஏற்றுமதி, இறக்குமதி செய்வோர் ஏனைய சாதாரண வியாரிபாரிகள் கூட அதிக லாபத்தைப் பெறுவர். புதிய வாடிக்கையாளர்கள் சேர்வர். மின்பொருட்கள் வியாபாரம் கூடிய லாபத்தைத் தரும். மாணவர்கள் கல்வியில் கூடுதலான கவனம் செலுத்துவர். பட்டப்படிப்புக்காக அயல்நாடு செல்லும் வாய்ப்பும் கிடைக்கும்.

### மகரம்

*(உத்தராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள், திரு வோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்)*

மகரராசியினருக்கு அட்டமத்து வியாழன் நடப்பதால் நற்பலன்கள் குறையும். முயற்சிகளில் இழுபறியும் தாமதமும் ஏற்படலாம். வருவாய் குறைவாகவே இருக்கும். குடும்ப அங் கத்தவர்களிடையில் தகராறுகள் ஏற்படும். மனைவி மக்களால் கூடுதல் செலவு காணும். செலவைச் சமாளிக்க முடியாமல் கடன் வாங்க நேரும். இதனால் மனநிம்மதி குறையும். குடும்பப் பெண்கள் தமது கருமங்களைச் சாதிக்க முடியாமல் இருப்பர். திருமண முயற்சிகள் கைநழுவிப்போகும். விரும்பிய திருமணம் நடக்காது. தூரதேசப் பிரயாணத்தை எதிர்பார்ப்போர் ஏமாற்றமடைவர். உத்தியோகத்தர்களுக்கு வேலைச் சுமை அதிகமாகும். போட்டி பொறாமைகளும் தலைதூக்கும். வர்த்தகர்கள் போட்டி மனப்பான்மையால் பொருட்களைக் குறைந்த விலைக்கு விற்று நஷ்டமடைவர். வங்கிநிலை திருப்தியாக இராது. மாணவர் கல்வியில் மந்தம், மறதி சோம்பல்தனம் போன்றவற்றால் உயர்ச்சியை இழக்க நேரிடும்.

### கும்பம்

*(அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள)*

இவ்ராசியினருக்கு சமமான பலன்கள் இவ்வாரம் நடக்கும். தொழில் முறையில் அலைச்சல்கள் இருப்பினும் இறுதியில் நற்பலன் காண்பர். குடும்பத்தில் சில கருத்து வேறுபாடுகள் தோன்றிமறையும். பிள்ளைகளால் நற்பலன்கிடையாது. அயலவர்கள் உதவி உண்டு. குடும்பச்செலவு அதிகரிப்பினும் அதற்கேற்ப வருமானம் கிடைக்கும். வாழ்க்கையை சிக்கனமாக நடத்தினால் துன்பம் ஏற்படாது. திருமண முயறசிகள் தாமத்தின் மேல் நிறைவு பெறும். கொடுக்கல் வாங்கல்களில் அவதானமாக இருக்கவும். ஏமாற்றிப் பணம் பறிப்பவர்கள் பற்றிக்கவனம் தேவை. உத்தியோகத்தர்களுக்கு வேலைச்சுமை அதிகமாயினும் தமது சாமர்த்தியத்தால் சிறப்பாகச் செய்து பாராட்டைப் பெறுவர். சகஊழியர்களின் உதவி உண்டு. வியாபாரிகளுக்கு வியாபாரம் மந்த நிலையிலேயே இருக்கும். ஆடம்பரப் பொருட்கள் விற்பனை செய்வோர் லாபமடைவர். மாணவர்கள் குறைந்த படங்களில் கூடிய கவனம் செலுத்தவேண்டும்.

### மீனம்

*(பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)*

மீனராசியில் பிறந்தவர்களுக்கு இவ்வாரம் நல்ல பலன்கள் காணலாம். தொடங்கும் கருமங்கள் விரைவில் பலவிதமாகும். குடும்பத்தவர்களிடையே ஒற்றுமை மனத்திருப்பதியும் கிடைக்கும். தூரதேசத்திலிருந்து வருவாய் கிடைக்கும். நண்பர்களும் உதவுவார்கள். தேகாரோக்கியம் நன்றாக அமையும். பெண்கள் பொருள் சேகரிப்பதில் ஊக்கமாக இருப்பர். வீட்டில் சுபநிகழ்வுகள் நடக்கும். ஆரவாரமும் மகிழ்ச்சியும் தென்படும். உத்தியோகத்தவர்களுக்கு பதவி உயர்வு, உற்சாகமாகக் கருமமாறுவர். வாத்தகர்களுக்கு வியாபாரம் மேலோங்கும். பணவருவாய் சேரும். பணியாட்களும் அதிக ரிப்பர். மாணவர்கள் தெளிவும் தேர்ச்சியும் அடைவார்கள். ஆசிரியர்களின் பாராட்டைப் பெறுவர்.

**2004 ஆம் ஆண்டு உங்களுக்கு எப்படி?**
**நாளை முதல் நமதுஈழநாட்டில்**

# யாழ்ப்பாணக்குடாநாடு பாலைவனமாகுமா? சோலைவனமாகுமா?

*நேற்றைய தொடர்ச்சி...*

மண்ணையும் பாறைகளையும் ஒழுங்கற்றமுறையில் அகழ்ந்து எடுத்தமை.

தொழிற்சாலை மற்றும் வாகனங்களின் கழிவு வெளிறே்றம்.

பொதுஇடங்களில் நகரக் கழிவுகளை இடுதல்.

மரங்கள் நடத்தவறியமை

குளங்களை பாதுகாக்கத் தவறியமை

நீர்த் தேக்கங்களின் அணைகள் தடைகளை அகற்றியமை.

இன்று நாம் போகின்ற போக்கை பார்க்குமிடத்து, பாலைவனத்தில் வாழ்வது எமது அடுத்த சந்ததியல்ல. நாமே பாலைவனத்தில் வாழவேண்டி வருமா என்ற ஐயப்பாடு ஏற்படுகிறது. எனவே நாம் இன்றே சூழல் பாதுகாப்பை மேற்கொள்ளவேண்டிய நேரம் வந்துவிட்டது. 1962 ஆம் ஆண்டில் குடாநாட்டை ஆய்வு செய்த இஸ்ரேல் நாட்டுப் புதைநீர் நிபுணர் கலாநிதி அனன் அறட் 30 வருட காலத்துக்குள் யாழ் குடா பாலைவனமாக மாறத் தொடங்கலாம் என எச்சரிக்கை செய்து அதைத் தடைசெய்வதற்கு சில அறிவுரைகளையும் கூறியிருந்தார். அவருடைய அறிவுரைகளை யாருமே அக்கறை கொள்ளவில்லை. அது ஒருபுறம் இருக்க, மறுபுறம் அவர் கூறியவாறு பாலைவனமாக 36 வருடம் சென்றும், மாறாமைக்கு எமது முன்னோர்கள் எமக்காக செய்து வைத்த சில நடவடிக்கைகளை இங்கு நன்றியுடன் நினைவு கூரப்படவேண்டியது கடமையாகும்.

தரிசு நிலங்களிலும் பொட்டவ் வெளிகளிலும், புற்போக்கு நிலங்களிலும், பனை மரங்களை நெருக்கமாக உண்டாக்கியமை.

வீடுகளிலும், சுற்றாடலிலும் பயன்தரு மரங்களை உண்டாக்கியமை.

பொது இடங்களிலும், ஆலயங்களைச் சுற்றியும் மரங்களை நாட்டியமை. குளங்களை அமைத்து அவற்றைப் பேணிக் காத்தமை.

பாரம்பரிய பண்பாடுகளையும் கலாச்சாரங்களையும் பேணியமை.

மேற்கூறப்பட்ட காரணங்கள், நாம் இன்று இந்தளவில் வாழ்வதற்கு வழிவகுத்துள்ளது. ஆனால், இந்த நிலைமை தொடந்து நீடிக்காதபடி ஆய்வுகள் தரும் தகவல்கள் எம்மை பயமுறுத்துகின்றன.

எமது முன்னோர்கள் எங்களுக்காக மேற்கூறப்பட்டவற்றை எதுவித பிரதிபலனையும் எதிர்பாராமல் செய்துவைத்துவிட்டுப் போனபடியால்தான், இவ்வளவு காலமும் நாம் குடாநாட்டில் வாழமுடிந்துள்ளது. இல்லாவிடில் எமது கவனமின்மையால் எப்பொழுதே, பாலைவனம் தோன்றியிருக்கவேண்டும். எமது முன்னோர்கள், எமக்காக செய்துவைத்தது போல் நாமும் எமது எதிர்கால சந்ததியினருக்கு வளமுள்ள மண்ணும், வற்றா நன்னீர் ஊற்றும் இயற்கையோடு அமைந்ததுமான ஒரு குடாநாட்டை வழங்கவேண்டுமா? என் பதை தீர்மானிக்க வேண்டிய கட்டத்தில் உள் ளோம்.

பாலைவனம் என்பதற்குரிய சரியான வரைவிலக்கணம் இதுவரை தெளிவுபடுத் தப்படவில்லை. ஆயினும், பொதுவான கருத்து அந்தப்பிரதேச மனிதர்கள் வாழமுடியாத இடமாக இருத்தலாகும். சூழல் காரணிகள் மாசு அடைவதன் மூலம், அதன் பயன் குறைந்து இறுதியில் மனிதர்கள் வாழமுடியாத இடமாக மாறும் நாலுபக்கமும் உப்பு நீரால் சூழ்ந்த ஒரு பிரதேச மாகிய யாழ்.குடாநாடு, பாலைவனமாக மாறுவதைத் தடுக்க முடியாது. இங்குள்ள முக்கிய சுற்றாடலை பிரச்சினைகளை இனம்கண்டு அவற்றுக்கு பரிகாரம் காணுவதன் மூலம், வனமாவதைத் தடுப்பதுடன், நின்றுவிடாமல் சோலைவனமாக மாற்ற முடியும். இது குடாட்டு மக்கள் ஒவ்வொருவரினதும் பங்களிப்பில் தங்கியுள்ளது. யாழ். குடாநாட்டின் முக்கிய சில சுற்றாடல் பிரச்சினைகளை நோக்குவதன் மூலம் அவற்றை இனம் காணக்கூடியதாக இருக்கும்.

**நீர் மாசடைதல்**

குடாநாட்டைப் பொறுத்தளவில், நீர் செயற்கையாகவும், இயற்கையாகவும் மாசடைகிறது.

**செயற்கை முறையில் மாசடைதல்**

நன்னீருடன் உப்புநீர் கலத்தல்.

பயிருக்கு இடப்படும் உரப்பசளையும், பூச்சிநாசினியும் மண்ணினூடாக நீர் நிலைகளை அடைந்து நன்னீருடன் கலக்கின்றது.

தொழிற்சாலைக் கழிவுகள் நேரடியாக நன்னீருடன் கலக்கின்றது.

மனிதக் கழிவுகள் நேரடியாக நன்னீருடன் கலத்தல்

தொழிற்சாலைக் கழிவு மானிடக் கழிவுகளின் நைதரன் பொருட்கள் மண்ணினூடாக நீர் நிலைகளை அடைதல்.

நோயை உண்டாக்கும் நுண்ணுயிர்கள் நன்னீருடன் கலத்தல்.


நீர் இல்லாவிடில் நாம் மட்டுமல்ல எல்லா உயிரினங்களும், உயிர் வாழமுடியாது. அதே வேளை, அங்குபயிர் செய்யமுடியாது இருப்பதுடன் மரங்களும் வளர முடியாத நிலை உருவாகும்.

இயற்கையான முறையில் நீர் மாசு அடைதல் எனக் கூறப்பட்ட போதிலும் உண்மையில் எம்மால் மறைமுகமாக ஏற்படுத்தப்பட்ட சூழல் மாசு அடைவதாகும். காற்று மண்டலத்தில் காபனீரொட்சைட்டு அதிகரிக்கும்போது, இயற்கை முறையான மாறுதல் நடைபெறுகிறது. காற்றில் காபனீரொட்சைட்டு அதிகரிப்பதற்குக் கார ணம், மரங்கள் அழிக்கப்பட்டமை. வாகனங்களில் அதிகரித்த புகை வெளியேற்றம். தொழிற்சாலை புகைகள் போன்றவற்றை குறிப்பிடலாம்.

வெளிவரும் காபனரொட்சைட்டை உள்ளெடுத்து ஒட்சிசனை வெளியிடுவதற்கு, போதுமான மரங்கள் இல்லாமையால் பச்சை இல்லம் பாதிக்கப்பட்டு, வளிமண்டத்தில் காபனீரொட்டின் அளவு அதிகரிக்கின்றது.

*(தொடரும்)*


# தென்கொரிய வெளிநாட்டமைச்சர் தனது பதவியிலிருந்து விலகல்!



தென்கொரியாவின் வெளிநாட்டு கொள்கையின்மீது அமெரிக்கா கொண்டுள்ள தொடர்புகளால் ஏற்பட்டுள்ள கருத்து வேற்றுமை காரணமாக, தென்கொரியாவின் வெளிநாட்டமைச்சர் யூன் யங் குவான் தனது பதவியிலிருந்து விலகியுள்ளார்.


தென்கொரியாவின் ஜனாபதியின் ஆலோசகர் அமெரிக்காவின் மீது தெரிவித்த ஆதரவான கருத்துக்கள் காரணமாகவே இவர் விலகியுள்ளார். தென் கொரிய எல்லையில் காணப்ப டும் அமெரிக்கப்படையின் தளங்களை மீண்டும் அந்த இடத்தில் அனுமதித்தல், ஈராக்கிற்கு படையினரை அனுப்புதல் ஆகியன தொடர்பாகவே கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டன.

தென்கொரியா நிர்வாகத்தில் மிகுந்த இடதுசாரி போக்குக் கொண்டவரும், இதனால் அமெரிக்காவின் மீது மிகுந்த வெறுப்புக்கொண்டவராகவும், செயல்பட்டுவந்துள்ளார் என பி.பி.சியின் தென்கொரிய நிருபர் "சார்லஷ் ஸ்கான்லென்" தெரிவித்துள்ளார்.



ஜப்பான் - ரோக்கியோ நகருக்கு தென்மேற்கே 200 கி.மீ தொலைவில் உள்ள கியுசு என்ற இடத்தில் 1952 மீற்றர் உயரமான எரிமலையிலிருந்து நேற்றுமுன்தினம் முதல் புகை கிளம்பத் தொடங்கியிருக்கிறது.

# ரோவர் விண்கலத்தின் ஆபத்தான பயணம்!



செவ்வாயில் தரையிறங்கிய "ரோவர் கலம்" முன்னர் திட்டமிட்ட பாதையில் நகர முடியாதவாறு, இலகுவாக தரையிறங்குவதற்கு உபயோகித்த காற்று நிரப்பிப்பைகள் தடையாக இருந்ததனால், நகரும் பாதையை மாற்றும் முயற்சியில் இதுவரை நாசா விஞ்ஞானிகள் ஈடுபட்டிருந்தனர்.

தற்போது ரோவர் கலம் நிற்கும் இடத்திற்கு 10 அடிக்கு அப்பால் உள்ள ஒரு பள்ளத்தைநோக்கி நகர்வதற்கு தயாராகியுள்ளது. இது ஒரு ஆபத்தான பயணம் எனவும் விஞ்ஞானிகளால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்தப் பள்ளத்தில் இறங்கியதும் 2 அல்லது 3 நாட்கள் அந்த இடத்தில் தொடர்ந்திருந்து அங்கு காணப்படும்கல், மண் ஆகியவற்றை ஆராயத் திட்டமிட்டுள்ளது. இதனிடையே தற்போது இறங்குவதற்கு திட்டமிட்டுள்ள பள்ளம் எரிகற்கள் விழுந்ததனால் ஏற்பட்டதெனவும் தெரிவிக்கப்பட்டது.

செவ்வாயில் நீர் உள்ளதா என்பதை ஆராய்வதற்கு இதுவே சிறந்த இடமென விஞ்ஞானிகள் கருதுகின்றார்கள். மேலும், இங்கு காணப்படும் கனியுப்புக்கள் மூலம் செவ்வாயில் நீர் உள்ளதா என்பதை அறியமுடியும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் ரோவர்கலம் இதுவரை அனுப்பியிருந்த வர்ணப்படங்களின் மூலம் அப்பிரதேசத்தின் நிலையை அறியக்கூடியதாக இருப்பதாக தெரிவித்தார்கள். மேலும் பொருள் ஒன்றிலிருந்து வெளிப்படும் வெப்பத்தைக் கொண்டு எடுக்கப்படும் படத்தின் வர்ணங்கள் மாறுவதாகவும்- மேலும் மாறுபடும் வர்ணங்களைக்கொண்டு, பூமியில் இருந்தவாறே படம் எடுக்கப்பட்ட பிரதேசத்தில் காணப்படும் கனியுப்புக்களை அறியமுடியுமென விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.



கலிபோர்னியாவில் நடைபெறும் இராணுவ தளபாடக் கண்காட்சியில் அமெரிக்க கடற்படை அதிகாரி ஒருவர் இலக்கு ஒன்றின் அமைவிடத்தை அளவீடு செய்யும் கருவியுடன் காணப்படுகிறார்.

# துப்பாக்கி ரவைகளுடன் விமானத்தில் பயணம் செய்த சூடானிய பிரஜை

வொஷிங்ரனில் உள்ள விமான நிலையத்தில் இருந்து, இங்கிலாந்தின் ஹீத்ரோ விமானநிலையத்திற்குப் பிரயாணம்செய்த சூடான் நாட்டுப் பிரஜையிடமிருந்து துப்பாக்கிச் சன்னங்களை சுங்கப் பரிசோதகர்கள் மீட்டுள்ளனர்.

பயங்கரவாத சட்டத்தின் கீழ் இந்தப் பிரயாணி தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

அமெரிக்காவின் விமான நிலையங்களின் சொத்துக்களுக்குப் பொறுப்பான 'போக்குவரத்து பாதுகாப்பு நிர்வாகம்' இது குறித்து விசாரணைகள் நடத்திவருவதாக தெரிவித்துள்ளது.

மேலும், பிரித்தானியப் பொலிஸாரின் விசாரணைகளின் மூலம் பயங்கரவாதத்திற்கும், கைதுசெய்யப்பட்ட பிரயாணிக்கும் எதுவித தொடர்பும் இல்லை என தெரிவித்துள்ளார்கள். இந்த வெடிப்பொருட்கள் எவ்வாறு தனது பைக்குள் வைக்கப்பட்டன என்பது தனக்குத் தெரியாது என அந்தப் பிரயாணி கூறியதாக அவருடன் பிரயாணம் செய்த மற்றப் பிரயாணிகள் தெரிவித்தார்கள்.



# இந்திய – பாகிஸ்தான் ரயில் சேவை இரண்டு ஆண்டுகளின் பின் ஆரம்பம்!

பாகிஸ்தான் நகரான லாகூரில் இருந்து 'சம்யுக்தா' எனப்படும் ரயில் வண்டி இரண்டு ஆண்டுகளின் பின் முதல் முறையாக இந்திய நகரான "அராறி"யை சென்றடைந்தது. அத்துடன் பஸ், வான் பயணங்களும் இரு நாடுகளுக்கிடையேயும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

60 பிரயாணிகள் மாத்திரமே பாகிஸ்தானில் இருந்து பிரயாணத்தை மேற்கொண்டனர்.

வீசா பெறுவதில் காணப்படும் சிக்கல்களால் அதிகளவிலான பிரயாணிகள் பயணம் மேற்கொள்ள முடியாதிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்தியா - பாகிஸ்தான் இடையே பஸ் பிரயாணங்கள் 5 ஆண்டுகள் நடத்துவதென அதிகாரிகள் தீர்மானித்துள்ளார்கள்.

மேலும், இருநாடுகளின் தூதுவராலயங்களில் தொழில்புரியும் அதிகாரிகளின் எண்ணிக்கையை உயர்த்துவதெனவும் இரு நாடுகளும் கூட்டாக அறிவித்துள்ளது.

காஷ்மீர் எல்லைப்பிரச்சினை தொடர்பான பேச்சுக்களை அடுத்த மாதம் ஆரம்பிப்பதென முடிவாகியுள்ளது.

1947 ஆம் ஆண்டு பாகிஸ்தான்- இந்தியா எல்லைகள் வரையப்பட்டன. இதனால் ஆயிரக் கணக்கான உறவினர்கள் பிரிக்கப்பட்ட எல்லையின் இரு பகுதியிலும் வசிப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.






# இத்தாலி செம்படை போராளிக் குழுவினர் இருவர் எகிப்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளனர்!

இத்தாலியின் செம்படை கெரில்லாக் குழுவைச்சேர்ந்த இரண்டு அங்கத்தவர்கள் எகிப்தில் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இரு நாடுகளும் கூட்டாக இணைந்து இந்தக் கைதினை மேற்கொண்டன.

முன்னாள் இத்தாலிய பிரதமரும் கிறிஸ்டியன் ஜனநாயாக கடசி தலைவருமான அல்டோ மொறோ கடத்திச்செல்லப்பட்டு கொலைசெய்யப்பட்டமைக்காக "ரீரா அல்களரி" என்ற செம்படை பெண் போராளியும், வேறு ஒரு அரசியல்வாதியைக் கடத்தி கொலைசெய்வதற்கு முயற்சித்த மயூரிசியோ பலிசீயும் கைதுசெய்யப்பட்டவர்களாவர்.

1978 ஆம் ஆண்டு கிறிஸ்டியன் ஜனநாயக கட்சியின் தலைவராக மோறோ கடமையாற்றிவந்தார். இவர் ரோம் நகர வீதி வழியாக தனது பாதுகாப்பு படையினருடன் சென்று கொண்டிருந்த வேளையில் - பாதுகாவலர் நால்வர் கொல்லப்பட்ட பின் மோறோ கடத்திச் செல்லப்பட்டிருந்தார். 55 நாட்களின் பின் இவர் கொல்லப்பட்டு இவரின் உடல் காரொன்றின் பின் பகுதியில் வைக்கப்பட்டு இவரது தலைமைக் காரியாலயத்தின் முன் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

இவர்கள் இருவரும் கெய்ரோ விமான நிலையத்தில் போலிக் கடவுச்சீட்டுக்களை உபயோகித்து வெளியேற முயற்சித்த நேரத்தில் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்கள் கைதுசெய்யப்பட்டதை இத்தாலிய உள்நாட்டமைச்சர் "கியூசைபி பிசானா" வரவேற்றுள்ளார்.

இவர்கள் கடந்த 20 வருடங்களாக தொடர்ந்து மறைவிடங்களில்



வசித்து வந்தாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

# பா.ஜ.கவுடன் கூட்டணியா? அ.தி.மு.க. முடிவில்லை!

கூட்டணி தொடர்பாக அ.தி.மு.கவிடமிருந்து இதுவரை ஒரு பதிலும் இல்லாததால், நாடாளுமன்றத் தேர்தலில் தமிழகத்தில் தனித்துப் போட்டியிட பாரதய ஜனதாக்கட்சி தயாராகி விட்டது.

தேசிய ஜனநாயக முன்னணி தமிழகத்தில் செயலிழந்துபோய், விட்டது. பா.ஜ.கவைத் தவிர மற்ற கட்சிகளான தி.மு.க., ம.தி.மு.க., பா.ம.க. ஆகியவை தற்போது காங்கிரஸ் கூட்டணியில் இடம்பெறவுள்ளது.

எனவே அ.தி.மு.கவுடன் கூட்டணி சேரத் தயார் என்று பா.ஜ.க. அறிவித்தது. ஆனால், அ.தி.மு.க. தரப்பில் இதுவரை ஒரு பதிலும் வரவில்லை. இதனால், நேற்றுமுன்தினம் பா.ஜ.கவின் தமிழக நிர்வாகிகள் மத்தியில் அமைச்சர் திருநாவுக்கரசரின் இல்லத்தில் சந்தித்துப் பேசினர்.

வாஜ்பாயை மீண்டும் பிரதமர் பதவிக்கு முன்நிறுத்துவதை ஜெயலலிதா விரும்பவில்லை என்பதாலேயே பா.ஜ.கவின் கூட்டணி கோரிக்கைக்கு இதுவரை அவர் பதில் சொலலாமல் இருந்துவருவதாகவும் கூறப்படுகிறது.

வரும் 20 ஆம் திகதிக்குப் பின்னரே கொளப்பாக்கம் அ.தி.மு.க நிர்வாகிகளுடனான நேர்காணல் நிகழ்ச்சியை முடிக்கிறார் ஜெயலலிதா. அதற்குப்பிறகே நாடாளுமன்றத் தேர்தல் குறித்து வாய்திறப்பார் ஜெயலலிதா என அ.தி.மு.கவினர் கூறுகிறார்கள்.

தற்போது அவர் வெறும் நேர்காணல் மட்டும் நடத்தவில்லை ஒவ்வொரு தொகுதிக்கும் உரிய வேட்பாளரையும் மறைமுகமாக தேர்வு செய்துவருகிறார் என்கின்றனர்.

இதனால் யாரும் எதிர்பாராத நிலையில் திடீரென அதிரடியாக வேட்பாளர் பட்டியலை அறிவித்து எதிர்க்கட்சிகளை அசத்துவார் என்கிறார்கள் அ.தி.முகவினர்.

அ.தி.மு.கவின் அறிவிப்பைப் பொறுத்தே எந்த முடிவையும் எடுப்பது என்ற நிலையிலிருந்த பா.ஜ.கவினர் மத்தியில் இப்போது ஒரே பரபரப்பு. கடைசி நேரம்வரை காத்திருந்து கழற்றிவிடப்பட்டால் நடுத்தெருவில் நிற்க வேண்டிருக்கும் என்பதால் இப்போதே அனைத்து தொகுதிகளிலும் தனித்துப் போட்டி யிடுவதற்கான ஏற்பாடுகளை செய்ய ஆரம்பிப்பது என முடிவு செய்துள்ளனர்.

நேற்று நடந்த அக்கட்சியின் அவசரக் கூட்டத்தின்போது, நாகர் கோவில், கோவை, புதுக்கோட்டை (திருநாவுக்கரசரின் தொகுதி) ஆகிய இடங்களில் நாம் தனித்து நின்றாலே வெல்லமுடியும் என ஒருதரப்பு கூறியுள்ளது. ஆனால், அது சாத்தியமில்லை என இன்னொரு தரப்பு தெரிவித்துள்ளது.

தனித்து நிற்க வேண்டும் என்ற நிலை வந்தால் இந்த மூன்று தொகுதிகளிலும் நீலகிரியிலும் அதிக தீவிரம் காட்டுவது, மற்ற இடங்களில் ஒப்புநோக்கு வேட்பாளரை நிறுத்துவது என முடிவுசெய்யப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# கூடுதலான அதிகாரங்களை புலிகள் கோருவது நியாயமானதொன்றாகும்!

## விக்கிரமபாகு தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் தமது இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பில் கூடிய அதிகாரத்தைக் கோரியிருப்பது நியாயமானது என நவசமசமாசக் கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற சிறப்புச் சந்திப்பொன்றின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் தமது இடைக்கால நிர்வாக அலகில் பொலிஸ், நீதித்துறை போன்ற கட்டுமானங்களை கோரியிருக்கும் அதிகாரங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியவை. அரசியல்வாதிகள் சமாதானத்தை முழுமையாக விரும்புபவர்களாயின் இந்த அதிகாரங்களை விடுதலைப் புலிகளுக்கு வழங்குதில் எவ்வித பாதகமான விளைவுகளும் ஏற்பட மாட்டாது.

விடுதலைப் புலிகள் கோரும் அதிகார அலகு அரசியல் அமைப்புக்கு அப்பாற்பட்டது என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. நடைமுறை அரசியலின் கீழ் இந்த பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்பது அனைவரும் ஏற்றுக்கொண்ட விடயமாகும்.

20 வருடமாக போராட்டம் ஒன்றை நடத்திவிட்ட குழுவொன்று அதிகார அலகு கோரிக்கையை முன்வைப்பது எதிர்பார்க்கமுடியாத விடயமாகும்.

தமிழீழ விடுதலைப்புலிகள் முன்வைத்துள்ள காணி, நீதி, காவல் துறை, நீதிமன்றம் போன்ற கோரிக்கைகள் பிரிவினைக்கான அம்சங்கள் அல்ல. இலங்கை அரசாங்கத்துடன் இணைந்தே செயற்பட விரும்புவதாக கோருகிறார்கள்.

தொழில், கல்விக்கோட்பாட்டில் விடுதலைப்புலிகள் பாரிய மாற்றத்தினை மேற்கொள்ள விரும்பவில்லை. தமிழீழ முறைப்படி அதிகார அலகுகளை கோருகிறார்கள் என்பது தவறானது எனவும் தெரிவித்தார்.



## நாற்சந்தி

'சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஜே.வி.பியும் இந்த வாரத்திலை கூட்டணிக்கான உடன்படிக்கை செய்யப் போகினமாம்....'

'இவ்வளவு காலமாய் இழுபட்ட கல்யாணம் ஒரு மாதிரி ஒப்பேறப் போகுது போலை.....'

'அதுவும் பதிவுத் திருமணம் மட்டும்தான் ... தாலிகட்டி குடும்பமாய் இருக்க மாட்டினமாம்...'

'இது என்ன புதுக்கதை செல்லுகிறாய்.... எனக்கொன்றும் விளங்கேலை....'

'அதாவது தேர்தலுக்கு மட்டும்தான் கூட்டு... அதுக்குப் பிறகு என்ன செய்யிறதென்று பிறகுதான் யோசிப்பினம் என்று ஜே.வி.பி. காரர் சொல்லியிருக்கினம் ...'

அதாவது கல்யாணத்தை பதிவு செய்வம்... பிறகு தரப்போகிற சீதனத்தை.... அதுதான் பதவிகளை வைத்து தாலியைக் கட்டலாமா விடலாமா என்று நினைக்கினம் போலை...'

'சரியாய் சொன்னாய் மணியம்... இவையின்ர கூட்டு மற்றாக்களுக்கு வேட்டு வைக்கத்தானேயொழிய வேறொன்றுக்குமில்லை.. இப்ப அவையின்ரை நோக்கம் ரணிலின் ஆட்சியையும், சமாதானத்தையும் ஒழிப்பது தான் .....'

முந்தி அம்மாவின்ர ஆட்சிக்கெதிரா கிளர்ச்சி நடத்தினவையோடை இப்ப மகள் கூட்டுச் சேரப் போறா...'

ஏன் இப்படியும் சொல்லலாமெல்லே .... புருஷனைக் கொள்ளுவார்கள் என்று தானே குற்றம் சாட்டியவர்களோடை மனைவி கூட்டுச் சேரப் போறாவென்று....'

'அரசியல் என்று வந்திட்டா மானரோஷம் எதுவுமே இருக்காது போலை...!

தெருவாசி

# கொழும்பு - புறநகர்ப் பகுதியில் கத்தோலிக்க தேவாலயம் சிங்களவர்களால் தீக்கிரை

கொழும்பு புறநகர்ப்பகுதியில் கட்டுவன - ஹோமகம என்னுமிடத்தில் அமைந்திருந்த கிறிஸ்தவ தேவாலயம் நேற்று முன்தினம் 12.30 மணியளவில் பௌத்த சிங்கள மதவெறியர்களால் தீயிட்டு எரிக்கப்பட்டது.

கட்டுவன கத்தோலிக்க ஆலயத்தின் நிர்வாகத்தினர் கருத்துக் கூறுகையில், ஒரு சில நாட்களுக்கு முன்னர் பௌத்த பிக்குகள் சிலர் ஒரு குழுவாக வந்து பங்குத் தந்தையை பயமுறுத்தியதுடன் உடனடியாக இவ்விடத்தைவிட்டு நகர்வதுடன் ஆலயத்தை இழுத்து மூடும்படி கடுமையாக எச்சரித்துவிட்டு சென்றதாகத் தெரிவித்தனர்.

பிக்குகளின் இந்தப் பயமுறுத்தலை - அருகிலுள்ள ஹோமகம பொலிஸ் நிலையத்தில், ஆலயத்தின் பங்குத் தந்தை பதிவு செய்தும், பொலிஸார் எதுவித நடவடிக்கையையும் எடுக்கவில்லை என்றும், இந்தப் பொலிஸ் நிலையத்தில் கடமையிலுள்ள பொலிஸார் அனைவரும் பௌத்த சிங்களவர்களே என்பதால், இதைக் கண்டும் காணாதவர்கள்போல் இருந்து விட்டார்கள் என்றும் மேலும் தெரிவித்தார்.

தெற்கில் பௌத்தர்களல்லாத ஏனைய மதத்தவர்களின் வழிபாட்டுத் தலங்கள் தாக்கப்பட்டும், அழிக்கப்பட்டும், எச்சரிக்கப்பட்டும், வருவது அண்மைக்காலமாக அதிகரித்து வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

கடந்த சில மாதங்களாகத் தொடரும் மத எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் பௌத்த சிங்கள இனமத வெறியர்கள் இதுவரை ஆறு கிறிஸ்தவ ஆலயங்களை எரித்தும், அழித்தும், கலவரமேற்படுத்தியும் நிர்மூலமாக்கியிருக்கின்றார்கள்.

# பெறுமதிசேர் வரி அதிகரிப்பால் வாழ்க்கைச் செலவு உயராது!

## பிரதி நிதியமைச்சர் கூறுகிறார்

பெறுமதிசேர் வரி அதிகரிப்பால் வாழ்க்கைச் செலவு மாதம் ஒன்றிற்கு 250 ரூபாவால் அதிகரிக்கும் என்ற கருத்து தவறானது என, பிரதி நிதியமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் கருத்துத் தெரிவிக்கையில், வற்வரி அதிகரிப்பால் வாழ்க்கைச் செலவு அதிகரிக்கும் என்ற கூற்றை நிரூபித்தால், பிரதி நிதியமைச்சர் என்ற பதவியைத் துறக்க தயாராக உள்ளேன். ஆனால், கிராமிய பொருளாதார அமைச்சுக்கு பொறுப்பாக இருப்பேன் என தெரிவித்தார்.

அமைச்சர் பந்துல குணவர்த்தனவின் இந்தக் கருத்துக்கு எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ கருத்துத் தெரிவிக்கையில்,

பெறுமதிசேர் வரியினால் ஏற்படும் நன்மை, தீமை பற்றி பொது மக்கள் நன்கு அறிந்துள்ளார்கள். எதிர்வரும் பொதுத்தேர்தலில் இதற்கான பிரதிபலிப்பை மக்கள் உரியவர்களுக்குத் தெரிவிப்பார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# எஸ். எம். ஜியின் நூல் நேற்று வெளியிடப்பட்டது!

(யாழ்ப்பாணம்)

மூத்த பத்திரிகையாளர் எஸ்.எம். கோபாலரத்தினம் எழுதிய 'பத்திரிகைப்பணியில் அரை நூற்றாண்டு' நூல் வெளியீட்டு நிகழ்வு - நேற்று நாவலர் கலாசார மண்டபத்தில் நமது ஈழநாடு நிர்வாக இயக்குநர் சி.சிவமகாராசா தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் வரவேற்புரையை பூ.நகுலன் நிகழ்த்தினார். ஆசியுரையை மூதறிஞர் வரதராசனும், வாழ்த்துரைகளை - பேராசிரியர் சண்முகதாஸ், கலாநிதி சொக்கலிங்கம், பேராசிரியர் சிவச்சந்திரன், புலவர் பார்வதி நாதசிவம் ஆகியோரும் நிகழ்த்தினர்.

இந்த நூலை பேராசிரியர் சண்முகதாஸ் வெளியிட்டுவைக்க வெளியீட்டுரையை உதயன் பிரதம ஆசிரியர் கானமயில்நாதன் நிகழ்த்தினார்.

ஆய்வுரையினை கலாநிதி குணராஜாவும், சிறப்புரையினை ரெலோ முதல்வர் சட்டத்தரணி ஸ்ரீகாந்தாவும் நிகழ்த்தினர்.

# புதுடெல்கியில் பாதுகாப்பு...

அமைச்சின் செயலாளர் அஜய் பிரசாத் தலைமையில், அனைத்துப் பாதுகாப்பு அதிகாரிகளுக்குமான தலைமைத் தளபதி வைஸ் அட்மிரல் ராமன் பூரி, இந்திய விமானப் படையின் பிரதித்தலைமை அதிகாரி எயர் மார்ஷல் எம்.மக்.மோகன் இந்தியக் கடற்படையின் பிரதித்தலைமை அதிகாரி வைஸ் அட்மிரல் அருண் பிரகாஷ், இந்திய பாதுகாப்பு அமைச்சின் மேலதிகச் செயலாளர் ரஞ்சித் லூசர், இந்திய இராணுவத்தில் பிரதித்தலைமை அதிகாரி லெப் - ஜெனரல் பி.பி.எஸ் பண்டாரி, இந்திய பாதுகாப்பு திணைக்களத்தின் உற்பத்தி மற்றும் விநியோகத்துக்கான கூட்டுச் செயலாளர் ரபான் ரோய், இந்திய பாதுகாப்பு அமைச்சின் இணைச்செயலாளர்கள் அரவிந் ஜோஷி மற்றும் முகோபாத்யா, இந்திய வெளியுறவு அமைச்சின் இணைச்செயலாளர் நீலம்தேவ் ஆகியோர் பங்குபற்றினர்.

இந்தச் சந்திப்புக்கு முன்னதாக நேற்றுக்காலை இலங்கையில் உயர் மட்டப்பாதுகாப்பு அதிகாரிகள் குழு, இந்தியப் பாதுகாப்பு செயலாளர் அஜய் பிரசாத்தைத் தனியாகச் சந்தித்துப் பேச்சுநடத்தியது.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பாதுகாப்பு நட்புறவு ஒப்பந்தத்தை செய்து கொள்வது, மற்றும் இருதரப்பு இராணுவ உறவுகளை அதிகரிப்பது குறித்தே இந்தச்சந்திப்புக்களில் பேசப்பட்டதாக கொழும்பிலுள்ள பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

### சமாதான....

இனமுரண்பாடுகளுக்கு தீர்வு காண ஆதரவை வழங்க கட்சிகள், குழுக்களுடன் நாம் முயன்று வருகிறோம். பலதரப்பட்ட கட்சிகளையும், அரசியல் சக்திகளையும் ஒன்றிணைப்பதன் மூலம்தான் - நிலையான சமாதானம் பெறப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

### கிட்டுவின்....

கட்டளைத் தளபதி கேணல் பால்ராஜ், தமிழீழ விடுதலைப் புலிகளின் அனைத்துலக தொடர்பகப் பொறுப்பாளர் காஸ்ரோ பங்குகொளளவுள்ளார்

1993 ஆம் ஆண்டு மூத்ததளபதி கேணல் கிட்டு உட்பட 10 மாவீரர்கள் 'அகத்' கப்பல் மூலம் தாயகம் நோக்கி வந்துகொண்டிருந்தபோது, சர்வதேச கடற்பரப்பில் வைத்து இந்திய கடற்படை தடுத்து நிறுத்திய போது வீரச்சாவு அடைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### கற்கோவளம்....

டுக்கொண்டதாகத் தெரியவருகின்றது.

இவர்களின் நிலையை உணர்ந்து கொண்ட கரையோர மீனவர்கள் - அங்கு காவல் பணியிலிருந்த இராணுவத்தினர் மற்றும் கடற்படையினரின் உதவியுடன் எஞ்சியவர்களை மீட்டனர்.

அதன்பின் உயிரிழந்த இருவரது சடலங்களும் மீட்கப்பட்டன. இந்த இரு இளைஞர்களது சடலங்களும் தற்போது பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (202,91)

### அரசியல்....

படுத்துவதற்கான அதிகாரங்களையும் கொண்டிருக்க வேண்டும்.

ஜனாதிபதிக்கும் - பிரதமருக்கும் இடையில் தற்போது நடை பெற்றுக் கொண்டிருக்கும் அரசியல் நெருக்கடியில் நாம் தலையிடமாட்டோம். இவர்களது பிரச்சினை தீரும்வரை நாம் காத்திருப்போம். அதுவரை நாம் போர் நிறுத்த உடன்படிக்கையையும், சமாதான முயற்சியையும் தொடர்ந்து கடைப்பிடித்து வருவோம் என தெரிவித்தார்.

# சட்டவிரோத ஆயுதங்களை ஒப்படைப்போருக்கு மன்னிப்பு

## ஜனாதிபதி சந்திரிகா திட்டம்

(கொழும்பு)

சட்டவிரோதமாக ஆயுதங்களை வைத்திருப்போர் அவற்றை ஒப்படைக்கும்போது மன்னிப்பு வழங்குமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உள்துறை பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு உத்தரவிட்டுள்ளார்.

நாட்டில் பெருகும் குற்றச் செயல்களை கட்டுப்படுத்தவே ஜனாதிபதி சந்திரிகா இந்த நடவடிக்கையை எடுத்துள்ளார்.

இதுகுறித்து, உள்துறை அமைச்சின் பேச்சாளர் ஒருவர் குறிப்பிடுகையில்,

இந்த விடயம் தொடர்பாக அதிகாரிகளுடன் கலந்தாலோசிக்கப்பட்டுள்ளது. இந்தச் சந்திப்பின்போது ஜனாதிபதி சந்திரிகா சட்டவிரோத ஆயுதங்களை முன்வந்து ஒப்படைப்பவர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்கும் முறையான திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது எனத் தெரிவித்தார்.

தற்போது, நாடுமுழுவதும் சட்டவிரோதமாக ஆயிரக்கணக்கான துப்பாக்கிகள் பாவனையில் உள்ளன. கடந்த வருடம் இத்தகைய ஆயுதங்களைப் பயன்படுத்தி பெருமளவிலான கொலைகள் மற்றும் சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றன. அடுத்து வரும் ஆண்டுகளில் கொலைகளின் எண்ணிக்கை இதனால் அதிகரிக்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

பொலிஸ் திணைக்களத்தின் அறிக்கைகளின்படி 2002 ஆம் ஆண்டில் 1282 ஆக இருந்த கொலைகளின் எண்ணிக்கை கடந்த வருடம் 1387 ஆக அதிகரித்தது.

இதனைக் கருத்திற்கொண்டே சட்டவிரோத ஆயுதங்களை ஒப்படைப்போருக்கு பொதுமன்னிப்பு வழங்கும் திட்டத்தினை நடைமுறைப்படுத்த ஜனாதிபதி சந்திரிகா தீர்மானித்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

### முரண்பாடுகளைத் தீர்க்க...

யாடலை நடத்த முன்வர வேண்டும்.

இவ்வாறு இருவரையும் நாம் கேட்பதற்கு காரணம் நாட்டின் உறுதியான அபிவிருத்திக்கும், சமாதானத்தை நிலைநாட்டுவதற்குமாகும். ஆனால், ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இடையில் தனித்தனியாக இதுவரை நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளில் எதுவித நல்ல முடிவும் ஏற்படவில்லை.

அத்துடன், குறைந்தது இரண்டு வருடங்களாவது நாட்டில் தேர்தல் ஒன்று வரக்கூடாது. ஜனாதிபதியும், பிரதமரும், இணைந்து ஒரு முடிவிற்கு வந்து நாட்டை முன்நோக்கிய பாதையில் இட்டுச்செல்ல வேண்டும்.

விடுதலைப்புலிகளுடன் அரசாங்கம் செய்துகொண்ட போர்நிறுத்த உடன்படிக்கையையும் வர்த்தக சமூகம் வரவேற்கிறது. மாகாணசபைத் தேர்தல் நடத்துவதில் எதுவித ஆட்சேபனையும் இல்லையெனவும் வர்த்தக சமூகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இந்த மாதம் 31ஆம திகதிமுன்னர் இருபிரதான கட்சிகளும் இணைந்து கலந்துரையாடி நிரந்தரதீர்விற்கு வரமுடியவில்லையெனின், நாடுதழுவிய ரீதியில் மக்களை ஒருங்கிணைத்து தமது எதிர்ப்பைக் காட்டவுள்ளதாகவும் வர்த்தக சம்மேளனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 16.01.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.